செந்தமிழ்

தொகுதி
34 Dec 36 - Jan 37

JL
031M211, N37CH
N37.34.2
215067

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-நூச] தாதுவருஷ மார்கழிமீ [பகுதி-உ.
Vol. 34. December 36,- January 1937. No. 2.

உள்ளுறை.

நியாயப்பிரவேசமணிமேகலை:—பத்திராசிரியர். சக—ருஉ

தமிழ் எனும் சொல் வரலாறு:— ஸ்ரீமத். R. நரஸிம்ஹன் (B.A. HONS.) ருங—சுச

ஸமாமணி:— ஸ்ரீமத். V. S ராமஸ்வாமி சாஸ்திரியார் B.A. B.L. சுரு—எச

பனையின்பெயர்கள்:—சுவாமி ஞானப்பிரகாசர், நல்லூர். எரு—அ0

குருகைமான்மியம்:—T. K. இராமாநுஜையங்கார். 369—376

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் வரவுசெலவுகணக்கு:—

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

—ன்றுக்கு ரூ. 4.] [தனிப்பிரதி அணா—8.
வெளிநாடுகளுக்கு ரூ. 4—8—0.

1936.

...HANMUGA RAJESWARA NAGANATHA SETHUPATHY AVL., and ...ARAYANA IYENGAR at the Tamil Sangam Power Press, No. 54, New Jail Road, Madura.

உ

ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும், மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சஙகம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவைசம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,
மானேஜர்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

I. சங்கப்பிரசுரம்.

		ரூ.	அ.	பை.
1.	ஞானாமிர்த மூலமும் உரையும்	1	0	0
2.	சைவமஞ்சரி	1	8	0
3.	யாப்பணியிலக்கணங்கள்	0	10	0
4.	வைத்தியசாரசங்கிரகம்	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	3	0	0
6.	மகாபாரதம் அரும்பதவுரையுடன்	4	0	0
*7.	தோத்திரத்திரட்டு			
*8	தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய. முதற்பாகம்.	6	0	0
*	ஷை இரண்டாம்பாகம்	4	8	0
	ஷை மூன்றாம்பாகம்	5	0	0
*9.	அபிதானசிந்தாமணி			
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய) ...	1	12	[illegible]
11.	திருவருணைக்கலம்பகம்	0	6	[illegible]
12.	அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ்	0	8	0
13.	கலைசைச்சிலேடைவெண்பா	0	6	0
14.	தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி ...	1	4	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	0	4	0
	பன்னூற்றிரட்டு (செலக்ஷன்)	0	4	0
	திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன ...	0	1	0

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௩௪]   தாது௵ மார்கழிமீ   [பகுதி-௨.

Vol. 34.   December 36,-January 1937.   No. 2.

நியாயப்பிரவேச மணிமேகலை.

[௧௨-ஆம்பக்கத் தொடர்ச்சி]

கீழ், "ஏனையளவைகளெல்லாம் கருத்தினி, லானமுறைமையின் அனுமானமாம்" என்றார்.

அவ்வனுமானங்கள் தன்பொருட்டனுமானம், பிறர்பொருட்டனுமானம் என்று இரண்டுவகைப்படும்.

அவற்றுள், தன்பொருட்டனுமானமாவது: ஏது தான் இருக்குமிடத்தில் தப்பாதிருக்கும் துணிபொருளுடன் ஒருநிலைக்களத்திருத்தலாகிய வியாத்தியை (தவறுதலுடனிகழ்ச்சியை) ஒருவன் உணர்ந்துகொண்டு, அத்தகைய ஏதுவைக்கண்டவிடத்தில் துணிபொருளும் இருக்கும் என்று, தானே ஆராய்ந்தறிதற்குச் சாதனமாயிருப்பது.

பிறர்பொருட்டனுமானமாவது: கீழ்ச்சொல்லியவாறு தன்பொருட்டனுமானத்தால் ஆராய்ந்தறிந்த ஒருவன், பிறனும் அவ்வாறு அறிந்துகொள்ளும்படி ஐவகையுறுப்புக்களாகிய அனுமான வாக்கியங்களைக் கூறுதலாம்.

பிறர்பொருட்டனுமானத்தை நிரூபிக்கும்பொழுதே தன்பொருட்டனுமானமும் தானே தோன்றுமாதலால், அதனை நிரூபிக்கவேண்டாது, பிறர்பொருட்டனுமானங்களையே நிரூபிக்கத்

தொடங்கி, அந்நிரூபணத்துக்கு இன்றியமையாத அவற்றின் உறுப்புக்களின் தொகையும் பெயரும் இவையென்கிறார்,

'பக்க மேதுத் திட்டாந்த முபநய
நிகமன மென்ன வைந்துள' (உகூ. நுஎ—நுஅ)

என்று.

இதன்பொருள்: முற்கூறிய காரியக்கருத்து, காரணக்கருத்து, சாமானியக்கருத்து என்னும் மூவகை அனுமானங்களுக்கும் பக்கம், ஏது, திட்டாந்தம், உபநயம், நிகமனம் என ஐந்து உறுப்புக்கள் உரியனவாம் என்றவாறு.

அனுமானம் என்பது அதிகாரத்தால் வருவித்து வேற்றுமையுருபுவிரித்துரைக்கப்பட்டது. அதனாலே அவற்றிற்குரிய உறுப்பு என்பதும் பெறப்பட்டது.

இனி, நிறுத்தமுறையே இவற்றிற்கு உதாரணங்கள் காட்டத் தொடங்கி, ஓரனுமானத்தைப் படைத்துக்கொண்டு, அதனுள் முதற்கண்ணிற்றற்குரிய பக்கவுறுப்பிற்கு உதாரணம் காட்டுகிறார்,

'..............................அவற்றிற்
பக்க மிம்மலை நெருப்புடைத் தென்றல்' (நுஅ—நுகூ)

என்று.

இதன்பொருள்: முற்கூறிய ஐவகையுறுப்புக்களுள் முதற்கண்ணதாகிய பக்கம் என்னும் உறுப்பிற்கு உதாரணமாவது—(மலையில் நெருப்புண்டென்றுகண்ட ஒருவன் அதனை அறியாத பிறனொருவனுக்கு உணர்த்தவேண்டி அப்பிறனைநோக்கி அவன் கண்டறிந்த அம்மலையைச்சுட்டிக்காட்டி) "இம்மலை நெருப்புடைத்து" என்று கூறுதல் என்றவாறு.

'பக்கம்' என்றது 'பக்கவசனம்' என்னும் உறுப்பிற்கு உதாரணம் என்பதுபடநின்றது.

'என்றல்' என்றது இது பக்கப்பொருளன்று, பக்கவசனம் என்று விளங்கக்கூறியவாறு.

துணிபொருளுடையதாகப் பக்கப்பொருளைக் கூறுங் கூற்று பக்கமெனப்பட்டது.

துணிபொருளாவது: அனுமானத்தால் ஆராய்ந்து அறியப்படும் பொருள்; அது ஈண்டு நெருப்பு.

பக்கப்பொருளாவது: துணிபொருளுடையதாக முதலிற் பக்கவசனத்தாற் கூறப்படுவது; அது இங்கு மலை. பக்கப்பொருளாகிய மலை, துணிபொருளாகிய நெருப்பை உடையது என்று கூறப்பட்டமையால் இம்மலை நெருப்புடைத்து என்ற வாக்கியம் இங்கு, பக்கவசனத்துக்கு உதாரணமாயிற்று.

இவ்வாறே ஒரு புழையில் பாம்பு உண்டு எனத் தெளிவிக்கும் அனுமானத்துக்கு, இப்புழை பாம்புடையது எனக் கூறுதலும், ஒரு மடுவில் முதலையுண்டு எனத் துணியக்கருதுவோன் இம்மடுவில் முதலையுண்டு எனக் கூறுதலும் முறையே அவ்வவ்வனுமானத்துக்கு முதலுறுப்பாகிய பக்கவசனங்களாம். இவ்வாறே பிற அனுமானங்களுக்கும் பக்கவசனம் ஆமாறு கண்டுகொள்க.

இப்பக்கவசனம் பிறனைத் தெளிவிக்கும் விருப்பமுடையோன் தான்கொண்ட துணிவுகூறுவதாம்.

இக்கூற்றை மேற்கோள் எனவும், பிரதிக்கினை எனவும், பக்கவசனமெனவும், பக்கமெனவும் வழங்குவதுண்டு.

இதனுட் சொல்லப்பட்ட பக்கப்பொருள் எதிரியால் (கேட்போனால்) அறியப்பட்டதாயிருக்கவேண்டும்; அவனால் அறியப்படாதபொருளாயிருக்குமாயின் பக்கப்போலியாம். இதனால் அவனுக்குத் துணிபொருளுணர்வு தோன்றமாட்டாது. இதுவேயுமன்றி, இப்பக்கவசனத்தாற் சொல்லப்படும் துணிபொருள் அப்பக்கப்பொருளில் அப்பொழுது கேட்போனால் அறியப்படாமலும், அப்பக்கப்பொருளொழிந்த பிறபொருளில் அறியப்பட்டும் இருக்கவேண்டும். பிறபொருளிலும் அறியப்படாதிருந்தால் துணிபொருளுணர்வு உண்டாகமாட்டாது; பக்கப்பொருளில் அறியப்பட்டிருந்தால் உணர்ந்ததையுணர்த்தலால் பிரமாணமாகமாட்டாது.

இனி, அப்பக்கவசனத்தாற்கூறப்பட்ட துணிபொருள் அப்பக்கப்பொருளில் உண்டு என்று தெளிவிக்கவேண்டி, அப்பக்க

வசனத்தை அடுத்து இரண்டாவது உறுப்பாய் நிற்கும் ஏதுவசனத்துக்கு உதாரணம் காட்டுகிறார்,

'புகையுடைத் தாதலா லெனல்பொருந் தேது' (௬0)

என்று.

இதன் பொருள்: இம்மலை நெருப்புடைத்து என்று முற்கூறிய பக்கவசனப்பொருளைத் தெளிவிக்கவேண்டி அப்பக்கவசனத்தை அடுத்து, இம்மலை புகையுடையது ஆதலால் என்று ஏதுவசனம் கூறுதல் ஏது என்னும் இரண்டாவது உறுப்பிற்கு உதாரணமாம் என்றவாறு.

பதப்பொருளொழிந்தன இசையெச்சத்தால் வருவித்து உரைக்கப்பட்டன.

இதன்கண்ணும், 'எனல்' என்றது, இது ஏதுப்பொருளன்று; அதனையுணர்த்தும் ஏதுவசனம் என்பது தோன்றநின்றது.

'பொருந்தேது' என்றது பக்கவசனத்தை அடுத்துக்கூறும் ஏதுவசனம் என்றவாறு; அன்றியும், தானிருக்கும் இடத்தில் தப்பாதிருக்கும் துணிபொருளுடன்பொருந்தியது என ஏதுப்பொருளின் இலக்கணந்தோன்றக் கூறப்பட்டது எனினும் பொருந்தும்.

'ஏது' என்னும் பொருட்பெயர் அப்பொருளையுணர்த்தும் வசனத்துக்கு ஆனமையால் பொருளாகுபெயர்.

இவ்வேதுவசனத்திற் சொல்லப்பட்ட புகை ஏதுப்பொருள்; அதனையுடைய மலை புகையுடையது; அதன் தன்மம் புகையுடையதாதல்; மலையில், புகையுள்ளபொழுது அது புகையுடையதாதலும், புகையில்லாதபொழுது புகையுடையதாதலின்மையும் தவறாது காண்டலால், புகையும் புகையுடையதாதலும் (புகையுடைமையும்) ஒன்றுமென்பது தருக்கநூன்முடிபு.

புகையுடைத்தாதலே (புகையுடைமையே) சாதனமான புகையாய் மலையைவிசேடிக்குந்தன்மமாயிருத்தலால் அது சாதனதன்மம் எனவும் வழங்கப்படும்; சாதனமாகியதன்மம் என விரியும்.

இவ்வாறே 'இப்புழை பாம்புடைத்து' என்னும் பக்கவசனத்துக்கு, 'பாம்புமுட்டையுடைமையால்' என்பதும், 'இம்மடு முதலை

யுடையது' என்னும் பக்கவசனத்துக்கு 'முதலைமுட்டையுடைமையால்' என்பதும் ஏதுவசனங்களாம்.

இவ்வாறே பிற அனுமானங்களுக்கும் அதன் அதன் துணிபொருளில் வியாப்பியமான பொருளுடைமையின் பெயர்மேல் இன், ஆன், ஆல்: என்னும் வேற்றுமையுருபுகளுள் ஒன்றுகொடுத்துக் கூறும் கூற்று ஏதுவசனம் என்னும் இரண்டாமுறுப்பு என்று அறிந்துகொள்க.

பக்கவசனம், ஏதுவசனம்: என்னும் இவ்வுறுப்புக்களைக் கேட்டோன், 'மலை புகையுடையதாயிருந்தால் அது நெருப்புடையதாயும் இருக்கவேண்டும் என்பது என்ன நியமம்?' என்னும் வினாவுக்கு விடையாக மூன்றாவது உறுப்பான திட்டாந்தவசனம் கூறப்படும்.

அத்திட்டாந்தவசனம், சாதன்மியதிட்டாந்தவசனம் வைதன்மியதிட்டாந்தவசனம் என இரண்டுவகையுண்டு; அவற்றுள், சாதன்மியதிட்டாந்தம், சாதனதன்மமுள்ளபொருள்களிலெல்லாம் சாத்தியதன்மமும் உள்ளது என்று தெரிந்துகொள்ளுமாறுகூறும் வியாத்திவசனத்துடன், சாதநசாத்தியதன்மங்களிரண்டும் ஒருங்குள்ளபொருளின்பெயர்மேல் உவமவுருபுகொடுத்துக் கூறுவது; இதற்கு உதாரணம் காட்டுகிறார்,

'வகையமை யடுக்களை போற்றிட் டாந்தம்' (௬௧)

என்று.

இதன்பொருள்: முற்கூறிய உறுப்புக்களுள், பக்கவசனத்தாற் கூறப்பட்ட துணிபொருள்வகையும், ஏதுவசனத்தாற் கூறப்பட்ட ஏதுப்பொருள்வகையும் பொருந்தியுள்ள (நெருப்புவிசேடமும், புகைவிசேடமும் பொருந்திய) பாகசாலைபோலும் என்று சொல்லுதல், ஈண்டு எடுத்துக்கொண்ட அனுமானத்துக்குரிய சாதன்மியதிருட்டாந்தவுறுப்புக்கு உதாரணமாம் என்றவாறு.

'வகையமை' என்றது இன்னவகையென்று கூறிற்றிலாயினும், இடம்நோக்கி முன்செல்லப்பட்ட சாத்தியசாதநங்களின் வகையென்று பொருள்கொள்ளநின்றது. 'வகை' என்பது ஒரு குறித்தசாதிக்கு உட்பட்டிருக்கும் பொருள்.

இனி, 'வகையமையடுக்களைபோல்' என்பதற்கு 'முறையா னமைந்த பாகசாலைபோலும்' எனக் கொள்வதும் ஒன்று.

முறையாவது, வியாப்திவசனத்துடன் கூறுதல். இப்பொருளால், 'யாது யாது புகையுடையது அது அது நெருப்புடையது' என்னும் வியாப்திவசனம் கூறி, 'அடுக்களைபோல்' எனல் திருஷ்டாந்தவசனம் என்பது பெறப்படும்; இதனால் ஏதுவுள்ள இடத்தெல்லாம் துணிபொருளும், உள்ளது எனக் காட்டும் (அன்னுவய வியாப்திவசனம்) சபக்கத்தொடர்ச்சிமொழி சாதன்மியதிட்டாந்த வாசகத்துக்கு உறுப்பாமென்பது குறிப்பாயிற்று. இக்குறிப்பினை, பின்பு வைதன்மியதிட்டாந்தங்காட்டுமிடத்து வெளிப்படுப்பர்.

'எனல்' என்னும் பயனிலை அதிகாரத்தால் வருவித்துரைக்கப்பட்டது. அடுக்களைபோல் எனல் திட்டாந்தம்: எனக் கூட்டுக. இதனால், இது திட்டாந்தப்பொருளன்று, திட்டாந்தவசனம் என்பது உணர்த்தியவாறாயிற்று.

இவ்வாறே ஏனை அனுமானங்களுக்கும் அதனதன் சாதநதன்மமுள்ளவிடத்தில் சாத்தியதன்மமும் உண்டு என்று காட்டும் அன்னுவயவியாப்திவசனம் (சபக்கத்தொடர்ச்சிமொழி) கூறி, அதனை அடுத்து, சாதனதன்மமும் சாத்தியதன்மமும் கூடியிருக்கும் ஒருபொருளின்பெயர்மேல் போல் என்னும் உருபுகொடுத்துச் சாதன்மியதிட்டாந்தவசனம் கூறிக்கொள்க. அங்ஙனங்கூறுங்கால் (இப்புழை பாம்புடையது, பாம்புமுட்டையுடைமையால்) என்னும் அனுமானத்துக்கு, 'யாது யாது பாம்புமுட்டையுடையது, அது அது பாம்புடையது; பாம்பு அடைகிடக்கும் புழைபோல' என்பது சாதன்மியதிட்டாந்தவாசகமாம். மற்றும் இவ்வாறே காண்க.

முற்கூறிய திட்டாந்தவசனத்தால் புகையுள்ளவிடமெல்லாம் நெருப்பும் உள்ளது என்னும் சாமானியஞான முண்டாகற்பாற்று. இதன்மேல், 'மலை நெருப்புடையது' என்னும் விசேடஞானம் தோன்றுதற்கு இருவகைத் திட்டாந்தவசனத்துக்கும் உறுப்பாயுள்ள உபநயம், நிகமனம் என்னும் இரண்டுவாக்கியங்களுள்ளன. அவை இங்குக் காட்டப்படும்.

அவற்றுள், சாதன்மியதிட்டாந்தவசனத்துக்கு உரிய உபநய வாக்கியம், நிகமனவாக்கியம் என்னும் உறுப்புக்களிரண்டனுள், முதலில் உபநயவாக்கியம் என்னும் நான்காமுறுப்புக்கு உதாரணம் காட்டுகிறார்,

'உபநயம் மலையும் புகையுடைத் தென்றல்' (௩௨)

என்று.

இதன்பொருள்: சாதன்மியதிட்டாந்தவசனத்துக்குரிய உபநய வாக்கியம் என்னும் உறுப்பிற்கு உதாரணமாவது: 'மலையும் அடுக்களைபோல் நெருப்பின் வியாப்பியமான புகைவிசேடத்தையுடையது' என்றுகூறுதல் என்றவாறு.

உம்மைப்பொருளாற்றலால் மலையும் திட்டாந்தப்பொருளிற் கண்ட நெருப்பின் வியாப்பியமான புகையுடைத்தென்பது பெறப்பட்டது.

இவ்வுபநயவுறுப்பால், திட்டாந்தவுறுப்பாலறியப்பட்ட துணிபொருளின் (நெருப்பின்) வியாப்பியமான ஏதுவுடைமை (புகையுடைமை) பக்கப்பொருளில் (மலையில்) ஒட்டிக்காட்டப்பட்டதாயிற்று. ஆகவே, இதனைக் கேட்போனுக்கு, நெருப்பின் வியாப்பியமான புகையுடையது மலை, (துணிபொருளின் வியாப்பியமான ஏதுவுடையது பக்கம்) என்னும் உணர்வு உண்டாகத்தக்கது.

இனி, இவ்வுணர்வுகொண்டு பக்கப்பொருளாகிய மலையில் துணிபொருளாகிய நெருப்பு உண்டு என்னும் உணர்வு தோற்றுதற்குரிய நிகமனவுறுப்புக் கூறுகின்றார்,

'நிகமனம் புகையுடைத் தேநெருப் புடைத்தேனல்' (௩௩)

என்று.

இதன்பொருள்: நிகமனவாக்கியமென்னும் உறுப்பிற்குதாரணமாவது: 'அடுக்களைபோல மலையும், நெருப்பின்வியாப்பியமான புகையுடைமையால், புகையின்வியாபகமான நெருப்புடையதே என்பது' என்றவாறு.

வியாப்பியம்—குறைநிலை. வியாபகம்—மிகுநிலை.

மலை நெருப்பின்வியாப்பியமான புகையுடைமையால் என்றது கீழ்ச்சொன்ன உபநயவாக்கியத்தாற் போந்தபொருளை அநுவதித்துக்கொண்டவாறு; அது இந்நிகமனவாக்கியத்துக்கு ஏதுவாயிற்று.

'மலையும்' என்றது அதிகாரத்தால்வருவித்துரைக்கப்பட்டது.

புகையுடைத்து என்பது நிகமனத்துக்கு ஏதுப்பொருள் குறித்துநின்றது.

புகைநெருப்புக்களின் பொருளாற்றலால் அவற்றின் வியாப்பிய வியாபகத்தன்மைகள் விரித்துரைக்கப்பட்டன.

துணிதற்பொருட்கேற்ப ஏகாரத்தை நெருப்புடன்கூட்டிப் பொருளுரைக்கப்பட்டது.

ஈண்டும் எனல் என்றது நிகமனவாசகம் என்பது தோன்ற நின்றது.

இரண்டாவது உறுப்பாகிய ஏதுவாசகத்தாற் சொல்லப்பட்ட புகையுடைமையாகிய ஏதுவுக்கும், இந்நிகமனவாக்கியத்தாற் சொல்லப்பட்ட ஏதுவுக்கும் வேறுபாடு யாதெனில்? முன்னையது கேட்போனுக்குத் துணிவிப்போனது சொன்மாத்திரையானே வியாத்தியுணர்வின்றித் தோன்றுவது; பின்னையது நெருப்பின் வியாப்பியமான புகையுடையதென வியாத்தியுணர்வுடன் தோன்றுவது. இவையே தம்முள் வேறுபாடென்க.

உபநயவாக்கியத்தால் அடுக்களைபோல நெருப்பின் வியாப்பியமான புகையுடையது மலை என்னும் போதம் உண்டாகும்; ஆகவே, இந்நிகமனவாக்கியத்தால் 'புகையின் வியாபகமான நெருப்புடையது மலை' என்னும் துணிவு பிறக்கும் என்க.

இவற்றால் துணிபொருளின் வியாப்பியமான ஏதுவையுடையது பக்கம் என்பது உபநயத்தின் பொதுவாய்பாடாகவும், ஏதுவின் வியாபகமான துணிபொருளுடையது பக்கம் என்பது நிகமனத்தின் பொதுவாய்பாடாகவும் கண்டுகொள்க.

இதுகாறுங் கூறிய ஐவகையுறுப்புக்களானுந் தோன்றிய அநுமிதியுணர்வை வலியுறுத்தற்கு வைதன்மியதிட்டாந்தமும் வேண்டு

மெனக் கருதி, அவ்வைதன்மியதிட்டாந்தவசனத்தின் உதாரணமும் காட்டுகிறார்,

'நெருப்புடைத் தல்லாதி யாதொன் றதுபுகைப்
பொருத்த மின்று புனல்போ லென்றல்
[1]மேய விபக்கத்து மீட்சிமொழி யாய
வைதன் மியதிட் டாந்த மாகும்' (௬௬—௬௭)

என்று.

இதன்பொருள்: (மலை நெருப்புடைத்து, புகையுடைமையால் என்னும் அநுமானத்துக்கு) 'யாதொன்று யாதொன்று நெருப்பில்லாதது, அது அது புகையுமில்லாதது, புனல்போல' என்று கூறுதலானது பொருந்திய விபக்கவசனத்துக்குரிய வியதிரேக வாசகத்தாலாகிய வைதன்மியதிட்டாந்தவாசகத்துக்கு உதாரணம் என்றவாறு.

' "மலை நெருப்புடைத்து, புகையுடைமையால்" என்னும் அநுமானத்துக்கு' என்பது இடம்நோக்கி அவாய்நிலையால் வருவித்துரைக்கப்பட்டது.

'நெருப்புடைத்தல்லா தியாதொன் றது புகைப்பொருத்த மின்று' என்றது வியதிரேகவியாத்திவசனம்; கருத்துநோக்கி வினாவும் சுட்டும் அடுக்கியுரைக்கப்பட்டன; இதனால், நெருப்புடையவல்லாதனவெல்லாம் புகையுடையவல்லாதன என்னும் வெதிரேகவியாத்தியுணர்வு தோன்றும்.

'மேய' என்றதனால் இதன் அன்னுவயவியாத்திவசனம் 'யாது யாது புகையுடைத்து, அது அது நெருப்புடைத்து' என ஏதுவசனம் முன்னும் துணிபொருள்வசனம் பின்னுமாகக்கூறுதலினின்றும் மாறுபடுமாறு, 'யாது யாது நெருப்புடைத்தன்று, அது அது புகையுடைத்தன்று' எனத் துணிபொருளின் இன்மைவசனம் முன்னும் ஏதுவின் இன்மைவசனம் பின்னுமாகக்கூறுதலே இவ்வெதிரேகவியாத்திவசனத்துக்குப் பொருத்தமாயுள்ளதென்பது படநின்றது. மேய மீட்சிமொழி என இயையும். மேய-பொருந்திய.

[1] புத்தகத்தில் "மேவிய பக்கத்து மீட்சி மொழியாய்" என்றிருப்பது பொருட்பொருத்தமில்லாமையாலே அஃதுண்டாம்படி, 'மேய விபக்கத்து மீட்சிமொழியாய' என்று திருத்திக்கொள்ளப்பட்டது.

விபக்கம்—துணிபொருளின் இன்மையுள்ள இடம்.

மீட்சிமொழி—அந்நுவயத்தின் மறுதலையான மொழி. மீட்சி மொழியாய என்றது, மீட்சிமொழியாகிய என்னும் ஒன்றனுருபு விகாரத்தாற் றொக்கது.

'புனல்போல்' என்றது வைதன்மியதிட்டாந்தவசனம். புனல்—தண்ணீர்; இது வைதன்மியதிட்டாந்தப்பொருள்.

இத்திட்டாந்த உதாரணத்தால் துணிபொருளின் இன்மையின் வியாப்தியையுடைய ஏதுவின் இன்மையையுடையது யாது அது வைதன்மியதிட்டாந்தப்பொருள் என வைதன்மியதிட்டாந்தப்பொருளின் இலக்கணமும் பெறப்பட்டது. அப்பொருளை வியதிரேகவியாத்திவசனத்துடன் வைதன்மியதிட்டாந்தப்பொருளின்பெயர்மேல் போல் என்னும் உருபுகொடுத்துக்கூறுதலே இவ் வைதன்மியதிருஷ்டாந்தவாசகமாம் எனக் காண்க.

இங்கு, எடுத்துக்காட்டும் வைதன்மியதிட்டாந்தவசனத்துக்கு உறுப்பாகிய வியதிரேகவியாத்திவசனம் (விபக்கத்தொடர்ச்சி மீட்சிமொழி) கூறியதனால், இதனின் மாறுபட்ட சாதன்மிய திட்டாந்தவசனத்துக்கும் அந்நுவயவியாத்திவசனம் (சபக்கத்தொடர்ச்சியுடனிலைமொழி) ஆங்குச் சொல்லிக்கொள்ளவேண்டும் என்பது வெளியாயிற்று.

'வியதிரேகம்' என்பது இன்மை. அது இங்குத் துணிபொருளின் இன்மையும், ஏதுப்பொருளின் இன்மையுமாகிய இவ்விரண்டிற்குமுளதாம் வியாப்தியைக்காட்டும் வசனத்துக்காயிற்று; இது வியதிரேகவியாத்திவசனம்; அல்லது விபக்கத்தொடர்ச்சிமீட்சி மொழி என வழங்கப்படும்.

வியாத்தியாவது: தப்பாதிருக்கும் உடனிகழ்ச்சி. அது இங்கு வியதிரேகத்தில், சாத்தியாபாவம் உள்ளவிடத்தெல்லாம் சாதனாபாவம் உண்டென்றுகாட்டும் வியதிரேகவியாத்திவாசகமாகும் (விபக்கத்தொடர்ச்சி மீட்சிமொழியாகும்). அதனை இங்குச் சாத்தியப்பொருளான நெருப்பில்லாத இடமெல்லாம் சாதகப் பொருளான புகையும் இல்லாமை விளங்கக்காட்டுதலான் அறிக.

இங்ஙனமன்றி ஏதுவில்லாத இடமெல்லாம் துணிபொருளுமில்லை யெனக் காட்டப்புகின் வியதிரேகம் மாறுபடும். ஏனெனில்

ஏதுப்பொருள் வியாப்பியமாயும் (குறைநிலையாயும்), துணிபொருள் வியாபகமாயும் (மிகுநிலையாயும்) இருத்தலால், அன்னுவயத்தில் (உடன்பாட்டில்) ஏதுவுள்ள இடத்தெல்லாம் துணிபொருளும் உள்ளதாயிருக்கும். அவ்வன்னுவயத்தின் (உடன்பாட்டின்) மறுதலையான வெதிரேகத்தில் (எதிர்மறையில்) அவ்வாறின்றி, துணிபொருளின்மை வியாப்பியமாயும் (குறைநிலையாயும்) ஏதுவின்மை வியாபகமாயும் (மிகுநிலையாயும்) மாறுபட்டிருக்குமாதலால் 'யாது யாது நெருப்பில்லாதது, அது அது புகையுமில்லாதது' எனத் துணிபொருளின் இன்மையை முற்கூறி ஏதுவின் இன்மையைப் பிற்கூறும் வினைச்சுட்டடுக்கால் ஆராய்வதே வியதிரேகவியாப்தி வாசகமாகும் (விபக்கத்தொடர்ச்சிமொழியாகும்). இங்ஙனமன்றி 'யாது யாது புகையில்லாதது, அது அது நெருப்புமில்லாதது' எனக் கூறின் புகையில்லாத பழுக்கக்காய்ச்சிய இரும்பில் நெருப்பு உண்மையால் வியாப்தியுணர்வு கெடும் என்க.

இங்ஙனம் காட்டப்பட்ட இருவகைத்திட்டாந்தத்துள் சாதன்மியதிட்டாந்தத்தால், 'புகையுள்ளவிடத்தில் நெருப்புண்டு' என்னும் உடன்பாட்டாலும், வைதன்மியதிட்டாந்தத்தால் 'நெருப்பில்லாதவிடத்தில் புகையில்லை' என்னும் எதிர்மறையாலும் புகையுடைமையாகிய ஏதுவால் நெருப்புடைமையாகிய துணிபொருள் உண்டென்று தெளிவிக்கப்பட்டமை காண்க.

இனி இவ்வைதன்மியதிட்டாந்தவசனத்துக்குரிய உபநய வாக்கியமும் நிகமனவாக்கியமும் கூறிற்றிலராயினும், சாதன்மியதிட்டாந்தவசனத்துக்குறுப்பாகக்கூறிய உபநய நிகமனவாக்கியங்களின் மறுதலைப்பட்ட வசனங்களே இவ்வைதன்மியதிட்டாந்தவசனத்துக்குரிய உபநய நிகமனவாக்கியங்களாம் என உய்த்துணர்ந்துகொள்க.

சாதன்மியதிட்டாந்தத்திற்குரிய உபநயவாக்கியம், அத்திட்டாந்தப்பொருளிலுள்ளபடியே சாத்தியவியாப்பியமான சாதநம் பக்கப்பொருளிலுமிருப்பதைக் காட்டினமையால், அதன் மறுதலையான வைதன்மியதிட்டாந்தவசனத்துக்குரிய உபநயவாக்கியம், அத்திட்டாந்தத்தாற்சொல்லப்பட்ட சாத்தியாபாவத்தின் வியாபகமான சாதநாபாவம் பக்கப்பொருளில் இல்லையெனக் காட்டுவதாம்.

அங்ஙனம் காட்டுமிடத்தில், இங்கெடுத்துக்கொண்ட அநுமானத்தின் வைதன்மியதிட்டாந்தத்தாற் சொல்லப்பட்ட நெருப்பின்மையின் வியாபகமான புகையின்மையின் இன்மை மலையினிடத்துள்ளதாகக் காட்டும் வாக்கியமே, இங்கு வைதன்மியதிட்டாந்தவசனத்துக்குரிய உபநயவாக்கியமாம்.

ஆகவே, மலை, புனல்போல, நெருப்பின்மையின் வியாபகமான புகையின்மையையுடையதன்று (புகையுடையது) என்பது வெதிரேகவுபநயவாக்கியமாம்.

இதன் பொதுவாய்பாடு துணிபொருளின்மையின் வியாபகமான ஏதுவின்இன்மை இல்லது (ஏதுவுடையது) பக்கம் என்பதாம்.

இதனால் எதிர்மறைமுகத்தானும் பக்கப்பொருள் ஏதுவுடையதாம் என்பது பெறப்படும்.

இனி, இதன் நிகமனவாக்கியம் வருமாறு:—இதன் சாதன்மியதிட்டாந்தவசனத்துக்குரிய நிகமனவாக்கியம், அத்திட்டாந்தப் பொருளிலுள்ளபடியே ஏதுவின்வியாபகமான சாத்தியப்பொருள் பக்கப்பொருளிலும் இருப்பதாகக் காட்டினமையால், அதன் மறுதலையான இவ்வைதன்மியதிட்டாந்தத்துக்குரிய நிகமனவாக்கியமாவது: இவ்வைத்ன்மியதிட்டாந்தத்தாற் சொல்லப்பட்ட சாதனாபாவத்தின் வியாப்பியமான சாத்தியாபாவத்தின் இன்மை பக்கப் பொருளிலும் இருப்பதாகக்காட்டித் தெளிவிக்கும் வாக்கியமாம்.

ஆகவே, இங்கெடுத்துக்கொண்ட வைதன்மியதிட்டாந்தவசனத்துக்குரிய நிகமனவாக்கியமாவது: 'மலை, புனல்போல நெருப்பில்லாததன்று (நெருப்புடையது)' என்பதாம். அதாவது: புகையின்மையின் வியாப்பியமான நெருப்பின்மையுடையதன்று (நெருப்புடையது) என்பதாம்.

இதன் பொதுவாய்பாடு 'பக்கப்பொருள் ஏதுவின் இன்மையின் வியாப்பியமான துணிபொருளின்மையையுடையதன்று' என்பதாம். இதனால் எதிர்மறைமுகத்தானும் பக்கம் துணிபொருளுடையது என்பது பெறப்படும்.

[தொடரும்.]

திரு. நாராயணையங்கார்,

பத்திராசிரியர்.

'தமிழ்'எனும் சொல் வரலாறு.

[திருநெல்வேலி நாஷனல் ஹைஸ்கூல் தலைமைத்தமிழாசிரியர்
R. நரஸிம்ஹன், B.A. (Hons.) எழுதியது.]

'தமிழ்' என்னும் சொல்லுக்குப் பொருள் யாது? அச்சொல் எவ்வாறு பிறந்தது? என்பதைப்பற்றி யாரும் முடிவாகக் கூறுதற்கில்லை. இச்சொல் பிறந்தவரலாற்றினைப்பற்றிப் பலரும் பல்வேறு கொள்கைகளுடையராயிருக்கின்றனர். கொள்கைகள் பலவுளவேனும் அவைகளை இரண்டாக வகுக்கலாம். ஒன்று தமிழ், திராவிடம் என்ற வடசொல்லினடியாகப் பிறந்தது என நிறுத்தும் கொள்கை. மற்றொன்று, தனித்தமிழ்ச்சொல் அல்லது பகுதியினடியாகப் பிறந்தது என நிறுத்தும் கொள்கை.

திராவிடம் எனும் சொல் ஆரியமொழியில் திராவிடர் வாழ்ந்த நாட்டையும் அவர் பேசும் மொழியையும் குறிக்கின்றது. இச் சொல்லினின்றே 'தமிழ்' எனும் வார்த்தை பிறந்தது என்று கொண்டு, பலர் 'திராவிட' என்ற சொல்லின் எழுத்துக்கள் ஒவ்வொருகாலத்திலும் சிறிதுசிறிதாக மாறிக் கடைசியில் தற்பொழுது வழங்கும் 'தமிழ்' எனும் உருவத்தை எவ்வாறு அடைந்தது என்பதை மக்கள் இயற்கையாகப் பேசும் ஒலியிலக்கணத்திற்குப் பொருந்தக்காட்டி வாதிப்பர். அக்கூற்றின் பொருத்தமின்மையைச் சுருக்கி யாராய்வாம்.

ழகரம் ஏனைய எழுத்துக்களைநோக்க உச்சரிப்பதற்குக்கடினமாயிருத்தலின், அதை ளகரமாகவும், லகரமாகவும், யகரமாகவும் மாற்றி மக்கள் பேசுவதைக் கேட்கின்றோமேயன்றித் 'திராவிட' என்ற சொல்லிற்போல டகரம் ளகரமாகி ழகரமாகும்முறையை உலகவழக்கில் நாம் காண்பதில்லை. தமிழொழிந்த ஏனைய சில திராவிடமொழிகளிற் பண்டை இலக்கியங்களில்மட்டும் ழகரம் காணப்படுமாயினும், தற்பொழுது அவைகளில் வழக்கழிந்து போயிற்று. மலையாளத்தில்மட்டும் ழகரம் இன்றளவும் வழங்கி வருகிறது. பிறமொழிகளில் ழகரம் வழக்கழிந்ததற்கு, வடமொழி கலந்ததே காரணம் எனச் சிலர் கருதுவர். வடமொழியிலில்லாத வல்லின றகரம் அம்மொழிகளில் இன்றும் வழங்கிவரும்பொழுது ழகரம்மட்டும் வடமொழிக்கலப்பால் வழக்கழிந்தது எனல்

பொருந்தாது. தமிழிலும் தற்பொழுது ழகரத்தையுடைய சொற்கள் மிகச் சிலராலேயே சரியாக உச்சரிக்கப்படுகின்றன. கற்றோருள்ளும் சிலர் வழுவின்றி உச்சரிக்கத்தெரிந்திருந்தும், பேசுங்கால் ளகரத்தையோ லகரத்தையோ தாம் வசிக்கும் இடத்திற்குத்தக்கவாறு, ழகரத்திற்குப் பதிலாக உபயோகிக்கின்றனர். 'வாழைப் பழம்' என்னும் தொடர் தமிழ்நாட்டிற் சில பாகங்களில் 'வாளப் பளம்' என்றும் 'வாலப்பலம்' என்றும், பலமொழிகள் ஊடாடும் சென்னைமாநகரில் 'வாயப்பயம்' என்றும் உச்சரிக்கப்படுவதை யறியாதார் யார்? ளகரத்திற்குப் பதிலாக ழகரத்தை உபயோகிப்போர் மிகச்சிலர். அதுவும் ழகரம் மொழிக்கு இடையில் வரும் பொழுதுதான். 'கேள்வி' என்ற சொல்லை மிகச்சிலரே 'கேழ்வி' என்று உச்சரிக்கின்றனர். இதைத்தவிரச் சொல்லின் இடையில் ளகரம் ழகரமாவதும் கடைசியில் ழகரமாவதும் உலக வழக்கில் இல்லை. சில ஜில்லாக்களில் 'திருவிழா' என்ற சொல் 'திருவிஷா' எனப்படும். 'புழுகு' 'புனுகு' என மாறும். சில சொற்களில் ழகரத்தையே அடியோடு நீக்கி, வேறு எழுத்தையும் அதற்குப் பதில் உபயோகியாமல் பேசும்முறையும் உலகவழக்கிற் காணப்படுகிறது. 'தொழும்பன்' என்பதைத் 'தொம்பன்' எனவும், 'பொழுது' என்பதைப் பொளுது போது எனவும் கூறும் வழக்கு இதனை நன்குணர்த்தும். மேற்கூறிய சான்றுகளால், 'திராவிட' என்ற சொல்லின் டகரம் ளகரமாகி ழகரமாயிற்று என்று சொல்வது, மக்கள் இயற்கையாகப் பேசும் ஒலியிலக்கணவிதிகளுக்கு முற்றும் மாறுபட்டதாகவேயிருக்கிறது. இதனால், 'திராவிடம்' தமிழாயிற்று என்போர்கொள்கையின் பொருத்தமின்மை நன்கு விளங்கும்.

காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை, சீனிவாசபிள்ளை முதலியோர் மேற்கண்ட கொள்கையைப் பின்வருமாறு கண்டித்தெழுதியுள்ளனர். தமிழ்மொழியில் தமிழ் என்னும் பெயர் வாராமுன்னர் வடமொழியில் திராவிடம் என்ற சொல் இருந்ததாயின் அப்பெயர் எப்பொருளை யுணர்த்திற்றோ? தமிழ் வழங்காத பிறிதோர் தேயத்திலா அதன்பெயர் முன்னம் தோன்றும்? இஃதுணராது தமிழ் வழங்கியஇடத்தில் தமிழுக்கோர் பெயரிருந்ததில்லையென்றும், வடமொழியிலிருந்து அதற்குப்பெயர்வந்ததென்றும் சொல்வது, யார்க்கும் நகைவிளைக்குமே! இவ்வாறு கூறிய மறுப்புப் பலர்க்கும்

உடன்பாடேயாகும். தமிழர் தமிழ்மொழியைக் குறிக்க ஆதியில் வழங்கிய ஒரு சொல்லே ஆரியத்தில் திராவிடம் எனத் திரிந்திருத்தல்கூடும். 'தமிழகம்' என்ற சொல்லே திராமிளம், திராமிடம் என்றாயிருத்தல்வேண்டுமெனச் சிலர் கருதுகின்றனர்.

அது எவ்வாறாயினும், தமிழ் என்ற சொல் திராவிடம் என்ற சொல்லுக்குமுன்னரே நம்மொழியில் வழங்கியிருப்பின் அதன் பொருள் யாது? அது எவ்வாறு உண்டாயிற்று? நம்மொழியை இச்சொல் குறிக்கவேண்டிய காரணம் யாது? என்ற வினாக்களுக்கு விடைதேடுவது மொழியிலக்கணவாராய்ச்சிசெய்வோர் கடனாகும்.

தாமோதரம்பிள்ளையவர்கள் வீரசோழியமுகவுரையில் "இமிழ் குமிழ் சிமிழ் என ழகரவீறுபெற்ற பதங்கள்போலத் தமிழ் என்னும் சொல், 'தமி' என்னும் வினையடியாகப் பிறந்து விகுதி குன்றித் தனக்கிணையில்லாமொழி யென்னும் பொருள் பயப்பது" என்று கூறுவர். தமிழ்மொழியைப்பற்றித் தனக் கிணையில்லா மொழி என்ற எண்ணம், தமிழ் நன்கு வளர்ச்சியடைந்தபின்னர் அதன் இலக்கண இலக்கியங்களை நன்கு கற்றுத் தெளிந்து பிறமொழிகளோடு ஒப்பிட்டுப்பார்க்கும்வல்லமையுடையோர்க்கேயுண்டாகும். அதற்குப்பின்னரே அவர்கள் அப்பெயரைநம்மொழிக்குக் கொடுக்க, அதினின்று இச்சொல் பிறந்திருக்கவேண்டும். எனவே இலக்கண இலக்கியங்கள் ஆக்கப்பட்டு நன்கு வளர்ச்சியடையா முன்னர் நம்மொழிக்கு வேறொருபெயர் இருந்திருத்தல்வேண்டும். அது யாது எனப் பின்னும் ஆராயவேண்டிவரும். அவ்வாறு ஒரு பெயர் இருந்திருப்பின் அது எங்காயினும் இலக்கியங்களில் பயின்றிருத்தலும் கூடும். அவ்வாறு பயின்ற இலக்கியநூல்கள் எதுவும் நமக்கு இதுகாறும் கிடைத்திலது. எனவே 'தமி' யென்னும் பகுதியடியாகத் தமிழ் என்னும் சொல் பிறந்திருப்பின் அது நம்மொழிக்கு ஆதிப்பெயராயிருந்திருக்கமுடியாது.

இக்கொள்கையைத் திராவிடப்பிரகாசிகை என்னும் நூலியற்றிய சபாபதிநாவலர் கண்டித்துள்ளார். கண்டித்தாரேனும், அவரும் இதுபோன்ற வேறொருகொள்கையையே வெளியிடுகின்றார். அது, 'தமிழ்' என்னும் சொல் இனிமை என்னும் பண்புணர்த்துவதாய்த் தென்மொழிக்குப் பெயராயிற்று என்பது. இக்கொள்கை பண்டிதர்களிலும் பலர்க்கு உடன்பாடேயாகும். இதற்குச் சான்றாக

அவர்கள், 'தமிழ்' என்னும் சொல் பண்டைநூல்களில் 'இனிமை' என்னும் பொருளிற் பயின்றுள்ளதை எடுத்துக்காட்டுவர். "தமிழ் தழீஇய சாயலவர்" என்னும் சிந்தாமணியடிக்கு 'இனிமைதழுவிய சாயலையுடையவர்' என்ற நச்சினார்க்கினியருரையும், "வண்டு தமிழ்ப் பாட்டிசைக்கும் தாமரையே" என்ற இடத்தில் 'இனிய பாட்டு' எனப் பொருள்கொண்டு கம்பர் கூறியதாக அவர்கள் கருதுவதும் இக்கொள்கைக்கு ஆதாரங்களாகும்.

நம்மொழியி னிலக்கியவின்பத்திலாழ்ந்து, அதன்பெருமையை யுணர்ந்தவர்கள், தம் மொழிப்பற்றினாலே, மொழியின்பெயருக்கு இப்பொருள்கொண்டிருத்தல்கூடும். ஆயின் நம்மொழியின் தோற்றத்திலேயே அதன் இனிமையை மக்கள் உணர்வது எங்ஙனம் இயலும்? அன்றி, 'தமிழ்' எனும் சொல் நம்மொழியைக் குறிக்கும் பெயராவதற்குமுன்பு இனிமை என்ற பொருளிலேயே வழங்கியிருந்தால் அதற்கு இலக்கியச்சான்றுகள் யாதாயினும் உளவோ? சிந்தாமணிக்கு முற்பட்ட தமிழ்நூல்களில் 'தமிழ்' எனும் சொல் இப்பொருளில் வழங்கியதாகத் தெரியவில்லையே. அவ்வாறு வழங்கியிருப்பினும் அதற்குமுன் நம்மொழிக்கு ஓர் பெயரிருந்திருத்தல்வேண்டுமே. அது யாது என்று பின்னர் ஆராயவேண்டிவருமே. எனவே 'தமிழ்'எனும் சொல் இனிமைப் பண்புணர்த்துவதாய் நம்மொழிக்கு ஆதியில் ஆய பெயராயிருத்தல் இயலாது. சர்க்கரை என்பது ஒருபொருளுக்கு முதலில் இடுகுறியாகிப் பின்னர் அப்பொருளின் சுவைக்குப் பிற்காலத்தே காரணப் பெயராயிற்று.

"சருக்கரை மாமணியே" (யாப்பருங்கலவிருத்தி 65.)

எனவருதல் காண்க. இதைப்போலவே தமிழ்மொழியினுள்ள பற்றினால், அது தோன்றி வளம்பெற்று உயர்நிலையடைந்த வெகு காலத்திற்குப்பின்னர்த் திருத்தக்கதேவர் கம்பர் முதலியோரால் இது கொள்ளப்பட்ட பொருளாயிருத்தல்கூடுமேயன்றி, ஆதியில் இக்காரணம்பற்றி நம்மொழிக்குப் பெயராயிற்றெனக் கொள்ளுதல் பொருத்தமுடைத்தன்று.

பின்னர்த் தமிழ் எனும் சொல்தான் எப்படி யுண்டாயிற்றெனில் கூறுதும். இது தனித்தமிழ்ச் சொல்லிலிருந்தோ சொற்றொடரிலிருந்தோ பிறந்திருக்கவேண்டுமென்பதே எமது துணிபு. அவ்வாறு பிறந்திருப்பின் அச்சொல்லையோ சொற்றொடரையோ

'தமிழ்' என்ற சொல்லிலிருந்து பகுத்துக்காணமுடியவில்லை என வினவின் அதற்குச் சமாதானம் வருமாறு:—

ஒருபொருளைப் பிறவற்றினின்றும் பிரித்து உணரவைத்தற் காகவே அதற்குப் பெயரிடுகிறோம். பிரி என்ற பகுதியினின்று போகி அதனினின்று பிறந்ததே பெயர் என்பது பலர்க்கும் ஒப்ப முடிந்த உண்மையாகும். அன்னணமே நன்கு திருத்தமுறாது பல மொழிகள் நம் தேயத்தே வழங்கிய பண்டைக்காலத்தே நம் தமிழ் மொழியைப் பிறமொழிகளினின்றும் பிரித்துக்காட்ட ஒரு பெயர் கொடுத்திருத்தல்வேண்டும். இவ்வாறு கொடுக்கப்படும் பெயர்களெல்லாம் பெரும்பாலும் காரணம்பற்றியே வந்திருத்தல்வேண்டும். அதன்காரணம் தெரியாது மறைந்துபோன பிற்காலத்தே அவைகளை இடுகுறிப்பெயர் என்பதுதான் மக்கள் இயல்பு.

பாஷைகளின் சொற்களெல்லாம் ஆதியில் ஓரசைச்சொற்களாகவே யிருந்திருக்கவேண்டும் என்று மொழிநூலாசிரியர் பலர் கூறுவர். அதையே தாதுக்களாகவோ அடிச்சொற்களாகவோ கொண்டு ஈரசையும் அதற்குமேற்பட்ட சொற்களும் பிறந்திருக்க வேண்டுமென அவர் கருதுவர். ஆதிமக்கள் தம்மனக்குறிப்புக் களைச்சொல்நிலையாலே வெளிப்படுத்த உபயோகித்த நூறு அல்லது அதற்குச் சிறிது மேற்பட்ட தாதுக்களே பிற்காலத்திற் பாஷைகளாக மாறியிருக்கவேண்டுமென்பதும் பலபெரியோர்கண்ட முடிபாகும். இத்தாதுக்கள் மறைந்துகிடந்து பிற்காலத்தே மக்கள் வாய்ப்பட்டுச் சொற்கட்கு அடியாயின என்று ஒருசாரார் கொள்ளினும், தாதுக்கள்கூடக் காரணம்பற்றி மக்களால் ஆக்கப்பட்டிருக்க வேண்டும் எனச் சிலர் கருதுகின்றனர். இதை நோக்கும்பொழுது நம்மொழிக்கும் ஆதிப்பெயர் ஒருகாரணம்பற்றி எழுந்திருத்தல் கூடும்.

மொழிநூலாசிரியர்கள் உலகத்திலுள்ள மொழிகளைப் பல குலங்களாக வகுத்து அதில் நம் தமிழ்மொழியை [1]ஒட்டுமொழிக் குலத்திலே சேர்த்தனரேனும், பகுதி விகுதி இடைநிலை என்று உறுப்புக்களை எளிதிற் பிரிக்கமுடியாத பதங்களும் பண்டை இலக்கியங்களிலேயே பயின்றிருக்கின்றன. இலக்கணத்திலும்

---

[1]Agglutinative languages.

மொழிநூலிலும் நல்ல ஆராய்ச்சியுடையார்க்கன்றிப் பிறப்பு அறியவொண்ணாப் பதங்களும் எத்தனையோ நம் பண்டை இலக்கியங்களில் ஏறியிருக்கின்றன. இலக்கண உரையாசிரியர்கள் அவ்வாறு வந்த சில பதங்களை ஆங்காங்கு விளக்கியிருக்கின்றனர். மேற்றிசையிலிருந்து வீசும் காற்று, கோடை எனப்படுகிறது. இது மேற்றிசையைக் குறிக்கும் குடக்கு என்னும் சொல்லடியாகப் பிறந்திருக்கலாம் எனப். பெரியோர் கருதுகின்றனர். அவ்வாறே கீழ்காற்றைக் குறிக்கும் 'கொண்டல்' குணக்கு என்பதினின்று பிறந்தது என்பர். வாடை தென்றல் முதலியன முறையே வடக்கு தெற்கு என்பவைகளினின்றும் பிறந்தன. உரையாசிரியர்போன்ற பண்டைப் பெரியோர் எடுத்துவிளக்காவிடின், தற்காலத்தில் இதையறிய நாம் இடர்ப்படுவோம். இவ்வாறு தற்காலத்தே புதிதாக ஒருவர் எடுத்துக்கூறின் அது பொருந்தாதென மறுத்துச் சிலர், எள்ளி நகையாடவுங்கூடும்.

அடிச்சொல் அல்லது தாதுக்களை அறியமுடியாத தமிழ்ச் சொற்களெல்லாம் வடமொழித்தாதுக்களிலிருந்தே பிறந்திருக்க வேண்டும் என்ற ஆதாரமற்ற எண்ணம் பலர்மனத்தே குடிகொண்டிருக்கிறது. சில தமிழ்ச்சொற்களின் தாதுக்கள் வடமொழி தென்மொழி யிரண்டிலும் காணப்படினும் அது வடசொல்லே யெனச் சிந்தனையின்றி முடிவுசெய்வோரும் உளர். இத்தவறான முடிவுகளுக்கெல்லாம் ஆரியமொழி திராவிடமொழிகளிலும் தொன்மைசான்றது என்ற கொள்கையே காரணமாகும். சாலவாரியாகத் தமிழிலக்கியத்திலேயிருக்கின்ற வடசொற்களைக் கணக்கிடுவோர்க்கு, தமிழிற்குத் தனிநிலை ஒருகாலத்தில் இருந்திருக்கவேண்டுமென்பதும்; தனித்தியங்கும் ஆற்றல் இன்றும் உண்டென்பதும் நன்குவிளங்கும். சரித்திரவாராய்ச்சிக்கு எட்டாத மிகமிகப் பழையகாலத்தே திராவிடமொழிகளும் ஆரியமொழிகளும் ஒருதாய்வயிற்றிற் பிறந்து வெவ்வேறு பாஷைகளாயினமை கூடுமாயினும், திராவிடமொழிகள் ஆரியத்தினின்றும் கிளைத்தெழுந்தன என்று எண்ணுதற்குச் சிறிதும் இடமில்லை. பழமையில் திராவிடமொழிகள் ஆரியத்திற்கு எவ்வாற்றானும் குறைந்தனவல்ல. இவ்வாறே மொழிநூலாசிரியர் பலர் கருதும்பொழுது தமிழ்மொழியின்பெயர் ஆதியில் பிறிதொருபாஷையில் வழங்கியிருக்கவேண்டுமென்றும், அதனினின்றும் மருவித் 'தமிழ்' எனும்சொல்

தோன்றியிருக்கவேண்டுமென்றும் கருதுவோர், தம் மனப்பான்மையை விளக்குகின்றனரேயன்றி, உண்மைதுலக்குபவராகார். நடுவுநிலையிகவாது ஆராய்வோர் யாவரும் ஆதிப் பாஷைகளின் பெயர்களெல்லாம், அவ்வப் பாஷையின் தாதுவிலிருந்தோ, சொல்லிலிருந்தோ, சொற்றொடரிலிருந்தோ ஒருகாரணம்பற்றிப் பிறத்தலே பெரும்பாலும் இயல்பாம் எனக் கருதுவர். அவ்வாறே மிகப்பழைய திராவிடகுலமொழிகளுள் தொன்மைசான்ற தமிழின் பெயர், அம்மொழியிலிருந்த சொற்றொடரிலிருந்தே பிறந்திருக்கவேண்டுமென்று தோன்றுகிறது.

சொற்றொடர்களிலிருந்து பிறந்தவைகள் ஒரே சொல்லாக வழங்குதற்கு நம்மொழியில் எத்தனையோ சான்றுகள் உள. சொற்றொடர்கள் ஒருசொல்லாகிவழங்குவதை இலக்கியத்திலும் உலகவழக்கிலும் இன்றும் காணலாகும். விதிபெறாமல் தமக்கு ஏற்றபடி இவ்வாறுவிகாரம்பெற்றுவரும் சொற்களை இலக்கணவாசிரியர்கள் மரூஉ என்று வழங்குவர். குணக்கு உள்ளது குணாது என்றும், சோழநாடு சோணாடு என்றும், தஞ்சாவூர் என்பது தஞ்சை என்றும், மருவிவருவன இதற்கு உதாரணங்களாகும். கோயம்புத்தூர் என்பது சமீபத்தில் கோவை என்று மருவி, எழுத்திலும் அவ்வாறே வழங்கப்பட்டுவருவதை யாவரும் அறிவர்.

இவ்வாறே 'தமிழ்' எனும் சொல்லும் ஒரு சொற்றொடரின் மரூஉவாக ஏன் இருத்தல்கூடாது? அவ்வாறாயின் அத்தொடரை நாம் எவ்வாறு மறந்துவிட்டோம்? என வினவலாம். நம்மொழி மிகத் தொன்மைசான்றதாதலின் 'தமிழ்' எனும் பெயர் சரித்திரவாராய்ச்சிக்கு எட்டாதகாலத்திலே மருவிவந்திருக்கவேண்டும். அதனால் அத்தொடரை நாம் மறந்துவிடுதலும் இயல்பேயாம். அச்சொற்றொடரை நாம் மறந்திருப்பினும் நம் நல்வினைப்பயனால் அத்தொடர் இன்றளவும் இலக்கியத்திலே வழங்கிவருகிறது. அது நாம் அனைவரும் நன்கு அறிந்த புத்தகத் தமிழிலும் வழங்கிவரும் 'தென்மொழி' என்ற தொடரேயாம்.

தென்னாட்டில் வழங்கும் தமிழ் தெலுங்கு கன்னடம் மலையாளம் துளுவம் என்ற பண்புற்ற மொழிகளும் தோடர், கோடர், கொண்டர், கூவர், ஓரியர், ராசமாலிகர் முதலியோர் பேசும் பண்புறாத மொழிகளும் திராவிடகுலத்தைச் சேர்ந்தவை. இவைகள்

ஒரு பொதுமொழியினின்று தோன்றிய கிளைமொழிகள் என்பதும் அவைகளில் தமிழ் தொன்மைசான்ற மொழி யென்பதும் மொழிநூலாளர் கண்ட முடிபாம். பண்டைக்காலத்திலே இம்மொழிகள் தென்மொழியெனப்பட்டன. வடநாட்டில் வழங்கிய ஆரியம் வடமொழியெனப்பட்டதுபோலத் தென்ஞட்டில் வழங்கிய மொழி அக்காலத்திலே தென்மொழியெனப்பட்டிருத்தல் பொருத்தமுடைத்தே. ஆயின் வடநாட்டார் திராவிடத்தைத் தென்மொழியென்றும், தென்ஞட்டார் ஆரியத்தை வடமொழியென்றும் கூறுவரேயன்றி அப்பெயரை அம்மொழிபேசுவார் ஆதரித்து ஏற்று வழங்குவரோ என ஐயப்படலாம். பண்டைக்காலத்தில் ஆரியர் திராவிடர் ஆகிய இருவரும் இந்தியாவைத் தமக்குப் பொதுவான பரந்ததொரு கண்டமாகவும், இருபக்கத்திலும் உள்ள இமயம் பொதியம் முதலிய பெரியமலைகளைச் சிறப்பாகவும் கருதிவந்தனர். முதற்சங்கப்புலவராகக் கருதப்படும் முரஞ்சியூர் முடிநாகராயர் சேரவரசனை வாழ்த்தும், "நடுக்கின்றி நிலியரோ..................

....

பொற்கோட் டிமயமும் பொதியமும் போன்றே" (புறம். 2.) என்ற புறப்பாட்டடிகள் இவ்வுண்மையை விளக்கும். திராவிடர் தம்நாட்டிற்குவடக்கே பேசப்படுவதால் வடமொழியென்ருவது ஆரியர் தம்நாட்டிற்குத்தெற்கே பேசப்படுவதால் தென்மொழியென்ருவது வழங்கினர் என்று கருத இடமில்லை. இருதிறத்தாரும் இந்தியாவைப் பொதுவாகநோக்கி அதன் வடபாகத்திலே வழங்கும் பிரதானமொழியை வடமொழியென்றும், தென்பாகத்தில் வழங்கும் மொழியைத் தென்மொழியென்றும் கூறினர் எனக்கொள்ளலே பொருத்தமுடையதாகும். இம்முறையிலே தற்காலத்திலும் சிலபெயர்கள் வழங்கிவருதலை நாம் காணலாகும். தென்ஞற்காடு வடவாற்காடு என்றும், மேல்நத்தம் கிழ்நத்தம் என்றும், தென்னூர் வடவூர் என்றும் வழங்குவது இம்முறைபற்றியதேயாகும். வடவாற்காட்டிற்குத் தெற்கேயிருப்பதால் தென்ஞற்காடு என்ருவது தென்ஞற்காட்டிற்கு வடக்கேயிருப்பதால் வடவாற்காடு என்ருவது அப் பகுதிகள் வழங்கப்படுகின்றன என யாரும் கூருர். ஆற்காடு என்ற ஒரு பெரிய நிலப்பிரிவின் வடபகுதியும் தென்பகுதியும் பொதுநோக்கால் இப்பெயரைப் பெற்றன என யாரும் அறிவர். இதுபோலவே மற்றை உதாரணங்

களுமாகும். மேற்கூறிய பெயர்களை அவ்வப்பாகத்தே வாழும் மக்களும் வழங்குவர். இம்முறையே திராவிடர்களாலும் அக்காலத்தே அவர்மொழி தென்மொழியெனப்பட்டிருத்தல்வேண்டும். திராவிடகுலத்தினின்றும் தோன்றிய மொழிகளில் தமிழ் மிகவும் பழமையுடைத்தாதலின் 'தென்மொழி' யென்னும் தொடர் நாளடைவிலே சிறப்புப்பெயராகத் தமிழையே குறிப்பதாயிற்று. பூவென்ற பொதுப்பெயர் பூவிற்சிறந்த தாமரையைக்குறிப்பது போலவும், முள்ளி என்ற பொதுப்பெயர் முள்ளையுடைய ஒருவகைச்செடியைமட்டும் சிறப்பாகக் குறிப்பதுபோலவும், தென்மொழி யென்றபெயர் நாளடைவிலே தமிழையே குறிப்பதாயிற்று.

தென்மொழி யென்ற தொடரிலிருந்தே தமிழ் எனும் சொல் திரிந்துவந்திருக்கவேண்டுமென்பது எமது துணிபாயினும், திடீரென இவ்வாறு திரிந்துவந்திருக்கக்கூடும் எனத் தோன்றவில்லை. சிறிதுசிறிதாக ஒவ்வொருகாலத்திலும் சிதைந்துவந்திருக்கவேண்டும். அவ்வாறு திரிந்திருப்பின் அத் திரிசொற்களெல்லாம் இலக்கியங்களிலே காணப்படுகின்றனவோ என வினவலாம். இச்சிதைவு மிக மிகப் பழையகாலத்தில் இலக்கண இலக்கியங்கள் ஆக்கப்படுவதற்கு முன்னமே நிகழ்ந்திருப்பின் நமக்கு இலக்கியச்சான்றுகள் எங்ஙனம் கிடைக்கும். இதற்கு இலக்கியச்சான்றுகள் தேடமுயல்வதும் வீண்காலப்போக்காகும்.

இலக்கணத்திற் கூறிய விதிக்கு அடங்காமற் சொற்களும் தொடர்களும் சிதைந்துவருவதை இலக்கணவாசிரியர்கள் மரூஉ என வழங்கிஞர்களாயினும், அவை, பெரும்பாலும் மக்கள்பேசும் ஒலியிலக்கணவிதிகளையனுசரித்தே சிதைந்துவருகின்றன என்பது ஆழ்ந்து ஆராய்வோருக்கு நன்குவிளங்கும். தென்மொழி யென்ற தொடர் சிதைந்து தமிழ் என்ருயது இன்றும் மக்கள் பேசும் ஒலியிலக்கணவிதிகளுக்குப் பொருத்தமானதே யென்பதை விளக்கலாகும்.

மக்கள்பேச்சில் சொற்களுக்கு முதலிலும் இடையிலும் கடையிலும் சில எழுத்துக்கள் கெடும்; வேறு சில எழுத்துக்கள் புதியனவாக வந்து தோன்றும். இருக்கும் எழுத்திற் சில வேருக மாறும். இம்மூன்று விதிகளும்பற்றியே சொற்கள், மக்கள்பேச்சில் சிதைகின்றனவென்பது நன்கு கவனிக்கத்தக்கது.

மேலே இரண்டாவதாகக்கூறிய திரிதல்விதிபற்றித் தேன் மொழியென்பது முதலில் தெம்மொழியென மாறியிருத்தல்வேண்டும். அன்பு, காண்பது: என்ற சொற்களை இயற்கையாக உச்சரிக்கும்பொழுது னகர, ணகரமெய்களுக்கும் பகரத்திற்கும் இடையே மகரமெய்யின் ஒலிக்கூறு தோன்றுகிறது. பேச்சுவழக்கில், 'அன்ம்பு' 'காண்ம்பது' என்றே சொல்லுகிறோம். பகரத்திற்கு மகரம் இனவெழுத்தாதலின் பகரத்தை மகரம் தொடர்ந்துவருதலே உச்சரிப்பதற்கு எளிதும் இயற்கையானதுமாகும். மேற்கண்ட சொற்களில் உச்சரிக்கும்பொழுது மகர ஒலிக்கூறு தோன்றுவதற்கு இதுவே காரணமுமாகும். இதுபோலவே 'காண்கின்றேன்' என்ற சொல்லை உச்சரிக்கும்பொழுது காண் என்ற முதனிலைக்கும் கிறு என்ற இறந்தகால இடைநிலைக்கும் நடுவில் ஙகரமெய்யின் ஒலிக்கூறு தோன்றுகிறது. இதை உலகவழக்கில் உச்சரிக்கும் முறையில் 'காண்ங்கின்றேன்' என எழுதலாம். வருமொழி அல்லது இடைநிலையின் முதலெழுத்தாகிய ககரத்தின் இனவெழுத்து ஙகரமாதலின் இடையே அவ்வொலி தோன்றிற்று. இதைப் பின்னும் உண் (ங்) கண், காண் (ங்) க, கண் (ங்) கூடு என்ற சொற்களையுச்சரிக்கும்போது கண்டுகொள்க. மேற்கூறிய சந்தர்ப்பங்களிலே உலகவழக்கில் னகரத்திற்குப்பின் மகரமெய்யொலிக்கூறு தோன்றுவதுண்டு. 'ஒன்பது' என்ற சொல் ஒன்(ம்)பது என உச்சரிக்கப்படுதல்போல. மேற்சொன்னபடி, இவ்வாறு தோன்றுவது பகரத்தின் இனம் பற்றியேயாகும். இதுவன்றி இனமல்லாத மெய்யெழுத்து ஒரு மெய்யைத் தொடரும்பொழுது இனமெய்யின் ஒலிக்கூறு நடுவே தோன்றுவதன்றி, அத் தொடரும்மெய், தொடரப்பட்ட மெய்யாகவே திரிதலும் உண்டு. இதற்கும்பேச்சுவழக்கில் உச்சரிப்பதற்கு எளிதாயிருப்பதே காரணமாகும். சண்முகம் என்ற சொல் சம்முகம் என்று உச்சரிக்கப்படுவது இதற் குதாரணமாகும். சில இடங்களில் தொடரும் இனமல்லாதமெய் கெட்டு, தொடரப்படும் மெய்யின், இனமாகத்திரியவும்செய்யும். இவற்றைத் தொகுத்துச் சில உதாரணங்கள் காட்டுதும்.

அன்பு—அன்ம்பு	ஒன்பது—ஒம்பது
*நன்மை—நம்மை	சண்முகம்—சம்முகம்

* நம்மை என்பது பாமரர் வழக்கு.

என்பதுகாண்க. இவ்வாறே 'தென்மொழி' யென்ற தொடரில் வருமொழி முதலில் மகரம் வருவதாலும் ணகரத்திற்கு மகரம் போலியாக உலகவழக்கிலே வருவதாலும், நிலைமொழியீற்றிலுள்ள னகரம் மகரமாகித் தெம்மொழி யென்றாயிற்று.

இதன்பின்னர் தெம்மொழி தம்மொழியென மாறியிருத்தல் வேண்டும். இவ்வாறு மாறிவருவதும் மக்கள் பேசும் ஒலியிலக்கண முறைக்குப் பொருத்தமுடையதாகும். உலகவழக்கில் பேசும் பொழுது அகரமும் எகரமும் மொழிக்குமுதலிலும் நடுவிலும் ஒன்றற்கொன்று போலியாக மாறிவருவதைக் காண்கிறோம்: உதாரணமாக,

கங்கை—கெங்கை	நகம்—நெகம்
சற்றே—சத்தே,—செத்தே	பலம்—பெலம்.

இவ்வாறே எகரத்திற்கு அகரம் போலியாக வருதலும் கீழ்க் கண்ட உதாரணங்களால் விளங்கும்.

பெண்ணையாறு—பண்ணையாறு	வெண்ணை—வண்ணை

மேற்கண்ட திரிதல் என்னும் விதிக்கிணங்கத், தெம்மொழி என்பது தம்மொழியாயிற்று.

மூன்றாவதாகத் 'தம்மொழி' 'தம்மிழி' என மாறியிருத்தல் வேண்டும். இவ்வண்ணமே மொழிக்கிடையில் இகரம் ஒகரமாகவும், ஒகரம் இகரமாகவும் ஒன்றற்கொன்று போலியாகவருதலை உலக வழக்கிலே பலசொற்களிலும் காணலாகும்.

பிணம்—பொணம்	மிளகு—மொளகு
மிதந்தது—மொதந்தது	பொத்தான்—பித்தான்

இவ்வுதாரணங்களில், 'பித்தான்' என்பதே 'பொத்தான்' என மாறியது என ஒருசிலர் கருதலாம். பித்தான் என்பதையே முதற் சொல்லாகக்கொண்டு அதினின்றே 'பொத்தான்' என்பது சிதைந்து வந்திருக்கும் எனக்கொள்ளின் பித்தானுக்குத் தக்க பொருளும் காரணமும் காணுதற்கில்லை. பொத்தான் ஆதிச்சொல்லாகவும் இருந்திருத்தல்கூடும். அதற்குப் பொத்தல் அடிச்சொல்லாயும் 'பொத்தல்' துவாரம் எனப் பொருள்படும். துவாரத்தை மறைப்பது என்ற பொருளில் இச்சொல் பிறந்திருக்கவேண்டுமெனக் கொள்ளலாம். அதனால் பொத்தானிலுள்ள ஒகரமே பித்தானில்

இகரமாக மாறியிருத்தல்வேண்டும். இவ்வண்ணம் உலகவழக்கில் மொழிக்கு முதலிலும் இடையிலும் ஒகரமும் இகரமும் ஒன்றற்கொன்று போலியாகவருதல்போல, தம்மொழி தம்மிழி என மாறியிருக்கும்.

இதற்கடுத்தபடியாகத் தம்மிழி தமிழியென்றாயிருத்தல்வேண்டும். மகரமெய் இரட்டித்துவரும் சொற்களில் ஒரு மகரம் பேச்சுவழக்கில் நீங்குவதைப் பெரும்பாலும் காணலாகும். அம்மி என்ற சொல் அமியென்றும், அம்மணம் என்றசொல் அமணம் என்றும் மாறிவருகின்றன. இரண்டு மகரமெய்யைச் சேர்த்து ஒரே சொல்லில் உச்சரிப்பது கடினமாதலால் மக்கள் பேச்சுவழக்கில் ஒருமகரமெய் நீங்கிவிடுவது இயற்கையே. அவ்வாறு நீங்கிச் சிதைந்த 'அமணர்' என்றசொல் பண்டை இலக்கியங்களிலும் ஏறியிருக்கிறது. இம்முறைக் கேற்பத் 'தம்மிழி'யிலுள்ள மகரமெய் நீங்கித் 'தமிழி' என்றாயிற்று.

கடைசியாகத் தமிழி என்பது தமிழ் என்றாவது வியப்பன்று. ழகரவீறுபெற்ற சொற்கள் இவ்வாறு மாறிவருவதைச் செய்யுள்வழக்கிலும் உலகிற் பேச்சுவழக்கிலும் காண்கிறோமன்றோ? குமிழி, சிமிழியென்ற சொற்கள் முறையே குமிழ், சிமிழ் என மாறிவருதல் காண்க.

"குமிழி விட்டிமிழ் குருதி" (சீவகசிங். 2239.)
"நீரிற் குமிழி யிளமை"

என்ற அடிகளிலே குமிழியென வழங்கும் சொல் பிற்காலத்தே குமிழ் என மருவிவந்தது. அவ்வாறே தமிழி என்ற சொல் தமிழ் என மாறிற்று.

தென்மொழி,- தெம்மொழி,- தம்மொழி,- தம்மிழி,- தமிழி,- தமிழ் எனச் சிதைந்தது மக்கள் பேசும் ஒலியிலக்கணத்திற்கு முழுதும் பொருத்தமுடைத்தே. தோன்றல் திரிதல் கெடுதல் ஆகிய விதிகளை அனுசரித்தே 'தென்மொழி' யென்ற தொடரிலிருந்து 'தமிழ்' சிதைந்து மரூஉச்சொல்லாக வந்திருக்கும்பொழுது, பிறிதொருபாஷைச்சொல்லினின்றும் நம்மொழியின் பெயர் திரிந்துவந்ததெனக்கொள்ளல் நியாயமாகாது.

ரமாமணி.

[௯௪-ஆம்பக்கத் தொடர்ச்சி]

6-வது அதிகாரம்.

கணவன்மனையில்

கிமித்யபாஸ்யாபரணானி யௌவனே
த்ருதம் த்வயா வார்த்தகசோபி வல்கலம்।
வத ப்ரதோஷே ஸ்புட சந்த்ர தாரகா
விபாவரீ யத்யருணாய கல்பதே॥

(குமாரசம்பவம். சருக்கம் 5. சுலோகம் 44.)

[யௌவனகாலத்தில், ஆபரணங்களை எறிந்துவிட்டுக் கிழத்தனத்தைத் தெரிவிப்பதான மரவுரி உன்னால் ஏன் உடுத்தப்பெற்றது? சாயங்காலத்துச் சந்திரனுடனும் நட்சத்திரங்களுடனும் பிரகாசிக்கிற இரவானது அருணோதயத்தின்பொருட்டு ஆகுமா? பூர்ணசந்திரனுடனும் நக்ஷத்திரங்களுடனும் விளங்குகிற ராத்திரியில் அருணோதயம் உண்டாகுமா? நீ சொல்வாயாக.]

முன்காலத்தில் ராஜசேகரபுரம் மிகவும் செழிப்புவாய்ந்த ஊராயிருந்தது என்பது யாவருக்கும் தெரிந்ததே. "ஜாவாத்தீவு" முதல் "ரோமாபுரி" வரையில் உள்ள இடங்களிலிருந்து வாணிகம் செய்வதற்காக வியாபாரிகள் இவ்வூரில் ஒருங்கே வந்து கூடுவார்கள். சில வருஷங்களுக்குப்பின் அந்நகரின்செல்வம் குறையத்தொடங்கிற்று. அவ்வூருக்கருகே நீர்ப்பெருக்கு மிக்கிருந்த ஆற்றில் இப்போது நீரோட்டம் இல்லை. வரவர, அந்த ஆறு வற்றி மணல்மேடாகிவிட்டது. ஆதலால், கப்பல்களின்மூலமாக நடந்துவந்த வியாபாரம் இப்போது நின்றுவிட்டது. வாணிகமிகுதியாற் செழிப்படைந்த நகரம் அது நின்றுவிட்டதால் எல்லாச்செல்வத்தையும் இழந்தது.

ஆனாலும் அவ்வூரில் செல்வம் முழுதும் குறையவில்லை. சைன்யத்திலுள்ள பெரிய உத்தியோகஸ்தர்களும், மற்றும் அவர்கள் வேலைக்காரர்களும் அங்கு வந்து குடியேறினார்கள். ஆனாலும் அந்நகரில் பல இடங்கள் பாழாகிச் சிறுகிராமங்களைப்போல் தோன்றின.

இவ்விதமான இடமொன்றில் மணிராஜன் வீடு இருந்தது. அவ்விடத்தில் மக்கள் போக்குவரத்து அதிகமாய் இல்லை. வீதிகளில் புல்லும் செடி கொடிகளும் முளைத்தன. மணிராஜன் வீட்டுக்குப் பின்புறம் நீண்டதோர் காடு இருந்தது. அவன்வீடு செங்கல்களாற் கட்டப்பட்டிருந்தாலும் அதிக உயரமாயில்லை. அதன் மேன்மாடத்தில் இரண்டுமங்கையர் நின்றுகொண்டு நாலுபக்கங்களிலும் பார்த்துக்கொண்டிருந்தார்கள். மாலைநேரமானதால் அந்தக்காட்டில் கணக்கிலடங்காத பறவைகள் ஒலித்துக்கொண்டிருந்தன. ஒருபக்கத்தில் ஒரு சிறுகிராமம்; வேறொருதிசையில் நகரத்தின் மாளிகைகள்; பிறிதொருதிக்கில் வியாபாரத்துக்காகக் குழுமியிருக்கும் மக்களின் கோலாகல சத்தம்.

அவ்வீட்டின் மேன்மாடத்திருந்த பெண்களில் ஒருத்தி சந்திரனைப்போலும் நிறமுள்ளவள். அவள் தன் கூந்தலை அரைவாசி கட்டிமுடிந்திருந்தாள். மற்றொருத்தி கறுப்புநிறமுள்ளவள்; மெல்லிய தேகம் படைத்தவள்; குறுகிய கூந்தலுள்ளவள். அவள் முகம் ஒரு நீலோற்பலத்தின் நடுவே வேறொரு நீலோற்பலம் விளங்குவதுபோல் இருந்தது. நிலவைப்போல் விளங்குபவள் சுந்தரியென்றும், நீலோற்பலம்போல் பிரகாசிப்பவள் அவள் நாத்தனாரான சியாமா என்றும் இதைப் படிப்போர்க்குச் சொல்லாமலே தெரியவரும். வனத்திலிருந்து வந்தகாரணத்தால், சுந்தரியை அவ்வூரில் இருக்கிறவர்கள் 'வனதேவதை' என அழைத்துவந்தார்கள்.

மாதர்களிருவரும் விளையாட்டாகப் பேசிக்கொண்டிருக்கும்போது, வனதேவதையின் கூந்தலைச் சியாமா வாசனைத்தைலம் தடவி நன்றாகப் பின்னிவிட்டாள். வனதேவதையின் நற்பழக்கத்தால் பிடாரிபோலிருந்த சியாமாவும் குணவதியாகிவிட்டாள்;

ஸ்பர்சமணி' யென்ற இரத்தினத்துடன் சம்பந்தம்பெற்ற இரும்பும் சுவர்ணமாகுமல்லவா?.

சியாமா:—"மதனி! ஆபரணங்களை நீ அணிந்துகொள்வாயாக; உன்முகத்தில் குங்குமப்பொட்டு இடுகிறேன்; அழகுவாய்ந்த உன் கழுத்தில் சந்திரஹாரம் போடுகிறேன்; பொன்காசுமாலையிடுகிறேன்; காதுகளில் இரத்தினஓலைகளை அணியச்செய்கிறேன்; உனக்கு விலையுயர்ந்த பட்டுப்புடவை உடுத்துவிடுகிறேன்; உனக்கு எல்லாவிதமான அலங்காரங்களும் செய்கிறேன்."

வனதேவதை:—"இவைகளால் என்னபயன்? மனதுக்கு ஏதாவது இன்பம் உண்டாகுமா?"

சியாமா:—[முககாந்தி விடியற்காலத்துநீலோற்பலம்போற் குறைவடைய] "மதனி! உனக்கு இன்பந்தான் எது?"

வனதேவதை:—"கடற்கரையில் அதேகானகத்தில் உலாவினால் எனக்கு இன்பம் உண்டாகும்."

சியாமா:—"அதற்கு உபாயம் எது?"

வனதேவதை:—"உபாயம் ஒன்றுமில்லை."

சியாமா:—"ஆனால் நீ என்னசெய்வாய்?"

வனதேவதை:—"ஸ்ரீ காளிகோவிலின் அதிகாரி என்னிடம் சொல்லியிருக்கிறார். 'யதா நியுக்தோஸ்மி ததா கரோமி'. என் விதியின்படி நான் நடப்பேன்."

சியாமா:—"ஸம்ஸ்க்ருதத்தில் நீ பண்டிதையாய் இருக்கிறாயே!"

வனதேவதை:—[பெருமூச்சுவிட்டுக்கொண்டு,] "இட்டமுடனென்றலையி லின்னபடி யென்றெழுதி, விட்டவயனும் செத்துவிட்டானோ?" "என் தலையெழுத்தின்படி நடக்கட்டும்." [என்று சொல்லி மௌனமாயிருந்தாள்.]

சியாமா:—வருத்தத்துடன் எழுந்தாள். பிறகு சின்னாட் கழித்து அவளுக்குத் தன்கணவனை வசப்படுத்தி அவனுடன் சேர்ந்திருக்கவேண்டுமென்று ஆசை தோன்றிற்று.

அவள் காட்டிற்சென்று ஒரு பச்சிலை பறித்துக்கொணர்ந்து தன் புருஷனுக்குக் கொடுக்கவேண்டுமென்று நினைத்தாள். ஒரு நாள் இரவில் யாமநேரம் கழித்துத் தனியாகவே வீட்டுக்குப் பின்புறம் இருக்கிற காட்டுக்குள் நுழைந்தாள். பகல்வேளையில் பச்சிலைகொணர்ந்தால், அதற்கு வீரியம் இராதென்பது பெண் பிள்ளைகளின் நம்பிக்கை.

இரவுவேளையில் சந்திரன் நன்றாகப் பிரகாசித்துக்கொண்டிருந்தான். செடிகளிலும் கொடிகளிலும், தூய வெண்மையான புஷ்பங்கள் மலர்ந்திருந்தன. பசு பக்ஷிகளெல்லாம் சத்தம்செய்யாமல் தூக்கத்தில் ஆழ்ந்திருந்தன. சில இடங்களில் நித்திரை கலைந்தவைகளான பறவைகள் சிறகை உதறும் சத்தம்; வேறு சில இடங்களிற் காய்ந்த இலைகள் மரங்களிலிருந்து உதிர்கிற ஓசை; மற்றும் சில இடங்களிற் கீழே சிதறிக்கிடக்கிற இலைச்சருகுகளுக்கிடையே அரவம் முதலியவைகள் ஊர்கிற அரவம்; வெகுதூரத்திற் காட்டுச்சேவல்கள் கூவிக் கொக்கரிக்கும் முழக்கம்; இளங்காற்றினால், மரங்களில் இலைகள் அசைகிற ஒலி; மரங்களிலிருந்து கீழே தொங்கிக்கொண்டிருக்கிறவையான கொடிகள் அங்கும் இங்கும் ஆடுகிற சத்தம்;— இவை சியாமாவின் காதுகளில் ஒன்றாக ஒலித்தன. வானத்தில் வெண்மைநிறமுள்ள சிறு மேகங்கள் ஓடிக்கொண்டிருந்தன.

இவ்வேளையிற் காட்டில் நுழைந்த சியாமா, பச்சிலைதேடப் புறப்பட்டு வெகுநேரம் அங்கும் இங்கும் அலைந்து, ஓர் ஔஷதியைப் பறித்துவந்தாள். அதை எவ்விதம் தன் கணவனுக்குக் கொடுத்து அவனை உட்கொள்ளும்படிசெய்கிறதென்று அவள் சிந்தித்துக்கொண்டிருக்கும்போது, அவள்கணவன் மணமிரங்கி அவளைக் கூட்டிக்கொள்ள உடன்பட்டான். மணிராஜனுக்குத் தன்னுடைய சகோதரியைக்குறித்த கவலையும் தீர்ந்தது.

[பெண்பிள்ளைகளிடம் பிறர்களை மருந்துவைத்து மயக்கலாமென்ற அறிவீனம், வெகுகாலமாக இருந்துவருகிறது. தனது கணவனையோ; வேறொருவரையோ, வசப்படுத்துவதற்காக அவருடைய ஆகாரத்துடன் பச்சிலையை அரைத்துக் கலந்து அவரைப் புசிக்கச்செய்வதால், அவருடைய குடல் வெந்துபோய், எப்போதும் அவருக்கு வயிற்றுவலியும் எரிச்சலும் அன்னத்துவேஷமும் ஏற்பட்டுக் கடைசியில், அவர் உயிருக்கே ஹானி ஏற்படுகிறது. இவ்விதம் மருந்திடப்பட்டவர்களில், நூற்றுக்குப் பத்துப்பெயர்கள்கூடப் பிழைப்பது அரிது. பெண்பிள்ளைகளுக்குப் படிப்பில்லாதகாரணத்தாலேயே இவ்விதமான அவிவேகம் ஏற்படுகிறது. V. S R]

வனதேவதைக்கோ, தான் பூஜைசெய்தபோது, ஸ்ரீகாளிதேவி வில்வதளத்தை ஏற்றுக்கொள்ளவில்லையேயென்ற கவலையால் வரவர மேனி இளைத்தது.

ஒருநாள் வனதேவதை, தன் நாயகனுடன் பேசிக்கொண்டிருக்கும்போது, திடீரென்று கீழேவிழுந்து இம்மண்ணுலகம் விட்டுப் பொன்னுலகம் புக்காள்.

மணிராஜன் துக்கக்கடலில் ஆழ்ந்து பின்வருமாறு பிரலாபித்தான்.

சுந்தரி, காபாலிகன்கையிலிருந்து தன்னைக் காப்பாற்றியவள் என்றும், பரதேவதையின்சந்நிதியில் கோவிலதிகாரியால் விவாகம்செய்துகொடுக்கப்பெற்றவளென்றும், தனக்குப் பிரியமான பத்தினி என்றும் அவன் நினைத்து நினைத்துப் பிரலாபித்தான்.

“நான் மிகமிகக் குற்றம்செய்தகாலத்திலும், என்னிடத்தில் அவமதிப்பை நீ செய்தவளில்லையே! அப்படியிருக்க, ஒரு க்ஷண நேரத்தில், யாதொருபிழையும் செய்யாதவனாகிய என்னைச் சம்பாஷிக்கத்தகுந்தவனாக நீ நினைக்கவில்லையே! அது உனக்கு நியாயமா?”

“உன்பேரில் யாதொருகுற்றமும் இல்லை; என் அதிர்ஷ்டக்குறைவால், பிரமனால் இந்தத்துக்கம் இடியாகச் செய்யப்பட்டுத்

திடீரென்று ஏற்பட்டது; ஏனென்றால் இடியால் மரமானது வீழ்த்தப்படவில்லை, அம்மரத்தின் கிளைகளைப்பற்றியதான கொடி நாசம் செய்யப்பட்டது." (ரகுவம்சகாவ்யம், 8-ஆவது சர்க்கம்)

பிறகு சின்னாட்கழித்துத் தன்மருகி இறந்துபோனமையால் தனது அருமைக்குமாரனுக்கு ஏற்பட்ட துக்கத்தைப் பொறுக்கலாற்றாது, மணிராஜனுடைய வயதுசென்ற தாயும் தேகவியோகமானாள். மணிராஜன் தாயினுடைய ஈமக்கடன்களை ஒழுங்காகச் செய்து பிறகு அவ்வூரில் இருக்க மனங்கொள்ளாமல், அதை விட்டுத் 'தீர்த்தபுரம்' என்ற ஊர்க்குப்போய், அங்கே வசித்து வந்தான்.

மணிராஜன் சிவபூஜையில் ஈடுபட்டவன். ஸ்ரீகந்தசுவாமியின் அருளால் அவன் பிறந்தவனாதலால், அந்தத் தெய்வத்தைத் தினந்தோறும் வணங்கிவந்தான். அவனது பூஜைக்கு உதவிக்காகவும் நைவேத்தியம் சித்தஞ்செய்யவும் ஒரு பிராமணச்சிறுவனைப் பரிசாரகனாக அமர்த்திக்கொண்டு தன்காரியங்களை நடத்தி வந்தான். மணிராஜன் ஒரு பரோபகாரி; பசி என்று வந்தவனுக்கு அன்னமிடாமல் இரான். பிறருடைய காரியங்களைத் தனது வேலையைப்போல் கவனிப்பான்.

"எவர்கள் தங்கள்காரியத்தை விட்டுவிட்டாவது, பிறர்காரியங்களை நிறைவேற்றுகிறார்களோ, அவர்களே சத்புருஷர்கள்." (பர்த்திருஹரிநீதிசதகம்.)

மணிராஜன் ஒரு சற்புருஷன். தன்வீட்டுக்காரியங்களும், தர்மகாரியங்களும் சரிவர நடக்காததால், மறுவிவாகம் செய்துகொள்ளவேண்டுமென்று நினைத்து, நல்லகன்னிகையைத் தேடுவதற்காக அவன் "முத்திநகர" மென்றதொரு பட்டிணத்தையடைந்து அங்கே நல்லகுலத்திற் பிறந்தவளான ஒரு கன்னிகை இருக்கிறாளென்று கேள்விப்பட்டு நண்பனொருவனுடன் அக்கன்னிகை தங்கியிருக்கும் வீட்டுக்குச் சென்றான்.

அக்கன்னிகையைக் கண்டவுடனேயே, அவள் அவனது மனத்தையும் கண்களையும் ஒரேசமயத்திற் கவர்ந்தாள். அவள்

நிகரற்ற அழகுவாய்ந்தவள் என்று நாம் சொன்னால், இதைப் படிப்போர்களான ஆடவர்கள் அவள் தங்கள் மனைவியைப்போல் அழகு வாய்ந்தவள்! என்றாவது ரமணிகள்! தாங்கள் கண்ணாடியின் எதிரில் நின்று பார்க்கும்போது அதற்குள் தெரிகிற பிரதிபிம்பம்போல் அவள் வனப்புவாய்ந்தவள் என்றாவது தெரிந்துகொள்வார்களாக. நாம் இவ்விதம் சொன்னதால், அவளுடைய உருவத்தின் ஒரு அம்சத்தைமட்டுமே எடுத்துக்காட்டியதாக இருக்கும். அவளுடைய உருவத்திற் சில குறைகளும் உண்டு. அவளது தேகம் உயரமானதன்று; சற்றுக் குட்டையென்றே சொல்லவேண்டும்; இரண்டாவது: அவளுடைய உதடு சற்றுப் பருமனானது; மூன்றாவது: அவள் சிவப்புநிறமுள்ளவளல்லள். ஆனால் அவளது கைகால் முதலிய எல்லா அங்கங்களும் நிரம்பியவைகள்; உருண்டை வடிவமுள்ளவைகள். மழைக்காலத்தில் மரங்களும் கொடிகளும் இலைக்கொத்துக்களால் எவ்விதம் மின்னுமோ, அவ்விதமே அவளது தேகமும் அழகின்பெருக்கால் மின்னிக்கொண்டிருந்தது. சற்றுக் குட்டையான அவளது தேகமும் வனப்பின்பெருக்கால் அதிக சோபைக்குக் காரணமாயிருந்தது. சில பெண்களின் நிறமோ பூர்ணசந்திரனது நிலவையொத்தது. வேறுசில பெண்களின் வர்ணமோ விடியற்காலத்துக் கிழக்கு ஆகாயம்போற் சிவப்பு வாய்ந்தது. அவள் சிவப்புநிறமுள்ளவளாய் இராவிட்டாலும், அவளிடம் மோகிக்கச்செய்யக்கூடிய வனப்புக்குக் குறைவேயில்லை.

இவள் சியாமளநிறமுள்ளவள். காய்ச்சப்பட்ட பொன் எவ்விதம் சியாமளவர்ணமுள்ளதோ அவ்விதமே அவள் நிறமும் சியாமளவர்ணம். பூர்ணசந்திரனது இரேகை, பொன்னிறமுள்ள மேகத்தைக் கிரீடமாக அணிந்திருக்கும் விடியற்காலநேரம், இவை இரண்டும் சிவப்புநிறமுள்ளவர்களுக்கு உவமானமாய் இருக்குமானால், வசந்தகாலத்தில் தளிர்த்திருப்பவையான மாமரங்களின் கொழுந்திலைகள், இந்தப் பெண்ணின் நிறத்துக்கு உவமையாய் இருக்கும்.

அநேகர்கள், சிவப்புநிறமுள்ளவர்களே அழகுவாய்ந்தவர்கள் என நினைக்கக்கூடும். அவர்கள் இந்தப் பெண்ணைப் பார்த்திருந்தால், சியாமளவர்ணமுள்ளவளாயிருந்தாலும், அவளே பூர்ணமான ஸௌந்தரியமுள்ளவளெனச் சொல்வார்கள். அப்பெண்ணைக் கண் குளிரக்கண்டும் எவர்கள் அவ்விதம் உரைக்கவில்லையோ, அவர்களுக்குச் ஸௌந்தரியத்தின் உணர்ச்சியே இல்லையெனச் சொல்லலாம்.

அவளுடைய உருவத்தைப் பிறர்க்கு எடுத்துரைப்பது எளிதன்று. புதியவையான மாவிலைக்கொத்துக்களை மனதில் நினைத்து, அவைகளில் வண்டுக்கூட்டங்கள்போன்ற கூந்தலையும் மனதில் எண்ணுங்கள்; சப்தமிதிதியில் பிரகாசிக்கிற சந்திரனைப் பழிக்கக்கூடிய நெற்றியின்கீழே செவிகளைத் தொடுகிறவையான கண்களையும் நினையுங்கள்; முற்றின மாவிலைகள்போல் ஒளிவிடுகிறவையான கன்னங்களையும் மனதிற் பாவியுங்கள்; அவைகளுக்கிடையில் கோவைக்கனிபோல் நன்றாகச் சிவந்தவையான அதரங்களையும் ஸ்மரியுங்கள்; அவ்விதம் செய்தால் இக்கன்னிகையின் லாவண்ணியம் உங்கள் மனதில் ஒருவாறு விளங்கும்.

அவள்கண்கள், நன்றாய்வளைந்தவையும் தளிர்போன்றவையுமான இமைமயிர்வரிசைகளுடன்கூடினவைகள்; மிகவும் ஒளியுள்ளவைகள்; அவளுடைய கடைக்கண்கள் அசைவற்றவையாய் இருந்தாலும், காண்போரின் மர்மத்தைத் துளைக்கக்கூடியவைகள். ஒருவர்மீது அவளுடைய பார்வை விழுந்தால், அந்தக்கணத்திலேயே, அவள் அவர்கள்மனத்தை ஊடுருவிப் பார்த்துத் தெரிந்துகொண்டாளென அவர்களுக்குத் தோன்றும். முகவொளியின் நடுவில் வர்ணிக்கமுடியாத இரண்டு பிரகாசங்கள் தோன்றின. ஒன்று எங்கும் செல்லக்கூடியதான அறிவின்திறமை, மற்றொன்று தன்மதிப்பு. தாமரைத்தண்டுபோன்ற கழுத்தைச் சற்று வளைத்துக்கொண்டு அவள் நிற்கும்போது, மேற்சொன்ன இரண்டு காரணங்களாலும், அவள் ரமணிகளுக்குள் மகாராணி என்பது தானாகவே விளங்கும். அக்கன்னிகைக்கு வயது ஏறக்குறையப் பன்னிரண்டு இருக்கும்.

அதிகமாக வர்ணித்ததாலென்? மகாகவி காளிதாசன் குமாரசம்பவகாவ்யத்தில் பார்வதிதேவியை வர்ணித்திருக்கிறபடி,

வாஷ்ட ௦..............................

முல்லையரும்பானது தளிர்களில் பொதியப்பெற்றதாகவும், முத்துக்களின்வரிசையானது சிவந்ததான பவளத்திற் பதிக்கப்பெற்றதாகவும் இருக்குமேயானால், உதடுகளின் ஒளியுடன் கூடியதான அவளது சிரிப்புக்கு ஒத்ததாக இருக்கும்.

ஜ்ஜா................................

மிருகங்களின்மனதில் வெட்கம் இருக்குமேயானால், பார்வதியின் அந்தக் கூந்தலை நன்றாகப் பார்த்துக் கவரிமான்பேடுகள் வால்களில் தாங்கள் வைத்திருக்கிற அபிமானத்தை நழுவவிடும். அவள்கூந்தலுக்குத் தங்கள் வால்களிலிருக்கிற சவரிகள் ஒருவிதத்திலும் ஒப்பானவைகள் அல்லவென்று அந்த மிருகங்கள் வால்களில் வைத்திருந்த பிரியத்தை விட்டுவிடும்.

ஸவெ-ாவமா........................

'உலகத்தைப்படைத்த பிரமன் எல்லாவஸ்துக்களிடமும் காணப்பெறுகிற அழகை ஒரே இடத்தில் வைத்துப்பார்க்க வேண்டுமென ஆசைகொண்டு, அழகுக்கு உவமையாகச் சொல்லக்கூடிய வஸ்துக்களின் சேர்க்கையாலேயே, படைக்கப் பெற்றவள்போல் அவள் விளங்கினாள்.'

(1-வது சர்க்கம், 44, 48, 49-வது சுலோகங்கள்.)

இவ்விதமாக இக்கன்னிகையின் வனப்பு விளங்கிற்று. இவள் சுக்கிரவாரத்தில் பிறந்தவளாதலால் இவளுக்கு 'ரமாதேவி' எனப் பெயர் இட்டிருந்தார்கள்.

மணிராஜன், இவள் தனக்குத் தகுந்த கன்னிகை எனத் தீர்மானித்துத் தீர்த்தபுரம்போய்ச் சோபனத்திரவியம் கொணர்ந்து நல்லநாளிற் சுபமுகூர்த்தத்தில் அக்கன்னிகையைப் பாணிக்கிரகணம்செய்துகொண்டான். அவளுடைய வயதுசென்ற

தகப்பனாரே விவாகம் செய்வித்தார். தம்பதிகள் அவரை வணங்க அவர், மனப்பூர்வமாக அவர்களை ஆசீர்வதித்தார்:—

வெயொ இரும்,........[‘பவபூதி’கவியின் மாலதீமாதவம்.]

“குழந்தைகாள்! அதிகப் பிரியம்வாய்ந்த நண்பனும், எல்லாச் சுற்றத்தாரும்! பணக்குவியலும், உயிரும், மாதர்களுக்குக் கணவனே; ஆடவர்களுக்கு மனைவியே; இது குழந்தைகளான உங்களிருவர்க்கும் தெரிந்ததாக இருக்கட்டும்; இதை மறக்காமலும் நீங்கள் இருவரும் விட்டுப்பிரியாமலும் ஒருவரோடொருவர் நேசத்துடன்கூடி வாழ்வீர்களாக,” என்று அவர் அன்புமிகுந்து நவின்றார்.

அக்கன்னிகையை வளர்த்துவந்தவளான ஒருமாது “ஐயா! மாப்பிள்ளையே! இக்குழந்தை இளம்பருவத்திலேயே தாயை இழந்தாள். நானே தாயாக இருந்து இவளைப் போஷித்துவந்தேன். இவள் நன்னடக்கையுள்ளவள்; பெரியோர்களுக்குப் பணிவிடை செய்துவந்தவள்; தெய்வபக்தியுள்ளவள். உமக்கோ இது இரண்டாவது விவாகம். தாங்களோ படித்தவர்கள். மிகவும் அனுபவசாலி. தயவுசெய்து இவளைத் தங்கள் குழந்தையைப்போல் பரிபாலித்துவருவீராக. நாங்கள் விசேஷமாய் வேறு என்ன சொல்லப்போகிறோம்,” என்று உரைத்து, அன்பின்மிகுதியால் சற்று விசனப்பட்டாள். பக்கத்திலிருந்த மற்ற மாதர்கள் மங்களகரமான மணக்காலத்தில் வருந்தலாகாது என்றுசொல்லி அவளைத் தேற்றினார்கள். மாப்பிள்ளையும் அவரைச் சேர்ந்தவர்களும் கல்யாணம் நிகழ்ந்த நான்குநாட்களிலும் அங்கேயேயிருந்து, சகலமான வைபவங்களையும் அனுபவித்து, ஐந்தாவதுநாள் பிராமணர்களால் வேதோக்தமான ஆசீர்வாதமும் செய்யப்பெற்று, மிகவும் களிப்புடன் தீர்த்தபுரம் நோக்கிப் புறப்பட்டார்கள்.

[தொடரும்.]

V. S. ராமஸ்வாமிசாஸ்த்ரி.

பனையின் பெயர்கள்.

(நல்லூர், சுவாமி ஞானப்பிரகாசர்.)

தொல்காப்பியத்து மரபியலில் (85) “புறக்காழனவே புல்லெனமொழிப” எனும் சூத்திரத்தில், புல்லும் மரமும் எனும் இரு சொல்லின் உற்பத்தி ஒருவாறு கூறப்பட்டிருத்தல் நோக்கத்தக்கது. இச்சூத்திரத்துக்கு நச்சினார்க்கினியர் பின்வருமாறு பொருள்கூறுவர்: “புறத்துக் காழ்ப்பு உடையனவற்றைப் புல் எனவும், அகத்துக் காழ்ப்பு உடையனவற்றை மரம் எனவும் சொல்லுப. புறக்காழன எனவே அல்வழி வெளிறு என்பது அறியப்படும். அவை, பனையும் தெங்கும் கமுகும் முதலாயின புல் எனப்படும். இருப்பையும் புளியும் ஆச்சாவும் முதலாயின மரம் எனப்படும்” என்கின்றார்.

புறத்தே வைரமுள்ளனவாய், உள்ளே ஓட்டையாகுந் தன்மையான சொற்றியைக் கொண்டனவாய் இருக்கும் தாவரங்களைப் “புல்” எனவும், வெளியிற் சொற்றியாய் உள் வைரமாயிருப்பனவற்றை “மரம்” எனவும் பெயரிட்டுவழங்கியதில், பொருள்களின் இயல்பை அவதானித்து அவற்றிற்குத் தக்க பெயரிடும் வன்மை காணப்படுகின்றது. உண்மையில், புல் எனும் சொல் உட்டுளையைக் காட்டுகின்ற ஓர் அடியிலும், மரம் எனும் சொல் வைரத்தைக் காட்டுகின்ற ஒரு அடியிலும் நின்றே பிறந்தன என நாம் அறிவோம். இச்சிறுகட்டுரையில், புல் எனுஞ் சொல் எழுந்த வரலாற்றை முதலிற் பார்ப்போம்.

புல் எனுஞ் சொல்லைச் சிங்களத்தில் பொல் எனவைத்துத் தெங்கின்பெயராகச் சொல்லுவர். சிங்களத்தில் இதுபோன்ற வேறு பல பழந்தமிழ்ச்சொற்கள், பழைய உச்சரிப்பின்படிபோலும்,

இன்றைக்கும் நிலவுகின்றன. பிற்காலத் தமிழினின்றுபோய்ச் சிங்களத்திற் கலந்தன எனச் சொல்லக்கூடியன, தட்டுகறணவா உஸ்கறணவா முதலிய ஒரு முந்நூறு நானூறு சொற்களே. ஆயின் எலிய (வெளிச்சம்) எலு (=எலி, யாடு) கொணு (=குடம், பசு, மாடு) ஆகிய பன்னூறு பழஞ்சொற்களும், ஓஹு (உவன்=அவன்) ஆகிய பிரதிப்பெயர்களும் அதிற் காணப்படுகின்றன. நம் இலங்கையில் இருந்த பழந்தமிழர்களே சிங்களத்தை ஆக்கிக்கொண்டு தாங்களும் சிங்களர் ஆனார்கள். முந்திய தமிழச்சிங்களர் வைத்த ஊர்ப்பெயர் காணிப்பெயர்களையே நாம் இன்றைக்கும் வழங்கிக்கொண்டு அவற்றைச் சிங்களப்பெயர்கள் என்கின்றோம். ஒரு உதாரணம்மாத்திரம்:— எத்தனையோ காணிப்பெயர்களின் ஈற்றில் "வத்தை" என வருகின்றதன்றோ? வத்தை எனும் சொல், இன்றைக்கும் தஞ்சாவூர் முதலிய சில இடங்களில் வழங்குகின்ற வட்டம் என்பதே. வட்டம்=தோட்டம். இக்காலத்து வளவு (=வளைவு=அடைப்பு) என்பதும் வட்டமும் பெயரளவில் ஒன்றுதான். வத்தையின் வேலியைச் சிங்களர் வய்ற்ற என்கின்றார்கள். வட்டம், வட்ட, வய்ற்ற, வத்த, வத்தை எனச் சொல் திரிந்து வந்ததைக் காண்க. இவ்வாறே பழந்தமிழ் வட்டம், தமிழச்—சிங்களத்தில் வத்தையாகி வந்து, இன்றைக்கும் யாழ்ப்பாணத்திற் பிந்திவந்த தமிழரால் காணிப்பெயர்களில் எடுத்தாளப்படுகின்றது! உண்மை எவ்வாறு எனில், ஒருகாலம் பழந்தமிழ் ஒன்றேயாயிருந்து பின் பாகதங்களாய்ப் பிரிந்துபோனபொழுது, இலங்கைத் தமிழ், சிங்களம் எனும் பாகதம் ஆயிற்று. சிங்களத்தீவுக்கு ஸ்ரீ ஈழம் என்றும் சிலர் உற்பத்தி கூறுவர். இது சரியாயின், ஈழ பாஷையே சிங்களம் எனச் சொல்லப்பட்டது ஆகலாம். பழைய சிங்களபாஷையை எலு (ஈழ) என அழைக்கும் வழக்கும் ஒன்று இருக்கின்றது. இவ்விஷயத்தை இங்கு அதிகமாய் விரித்துக்காட்டல் அமையாது. [எனது The Dravidian Element in Sinhalese எனும் கட்டுரையைக் காண்க.] மேலும், சிங்களமானது

கன்னடம் ஆகிய பிற திராவிட பாகதங்களுக்கு முற்பட்டது; ஆதித் தமிழோடு ஒற்றுமைகொண்டது. பழைய ஈழபாஷை, புத்தசமயம் இலங்கைக்குவந்தபின்னர் மாகதம் ஆகிய வட பாகதங்களினின்றும், பாளி ஸம்ஸ்க்ருதம் ஆகியவைகளிலிருந்தும் பல்லாயிரம் சொற்களை எடுத்துத் திரித்துத் தற்பவமாகத் தன்னோடு சேர்த்துக்கொண்டமையால், பிற்காலம் நமக்குச் சிங்களம் "தனக்கடாச் சிங்களம்" ஆகி, மேலோட்டமாய்ப் பார்ப்போருக்கு ஆரிய பாஷைகளுள் ஒன்றாகத் தோன்றும். அதை நாம் தமிழ்மொழி நூல் எனும் துணைக்கருவியோடு ஆராய்வது உண்டாயின், அது அடித்தளத்தில் (வசனக்கட்டிலும், ரூபகாரம் வியக்தி ஆகியவைகளிலும், அதிக பழமைவாய்ந்த சொற்றொகுதியிலும்) தமிழே என்பது கரதலாமலகம் ஆகும். "பொல்" என்பது பழைய ஈழச் சொற்களுள் ஒன்றென்பதில் மயக்கமில்லை. பொல்கஹவெல ஆகிய இடப்பெயர்களிலும் பழைய சிங்களநிகண்டுகளிலும் அதனைக் காணலாம். றுவன்மல் நிகண்டில்: "நெறளு, மஹறுக், கஸ, பொல்" என வருகின்றது. இவற்றுள் ஈற்றில் நிற்பதே முந்தியது என்பது பல ஏதுக்களாற் பெறப்படும்.

ஆதலால் தென்னை பனை ஆகிய உட்டுளைத் தாவரங்களின் பெயர் ஆதியில் பொல் என இருந்தது எனலாம். இப் பொல் அல்லது புல் பொள்-ளுதல் எனும் வினையோடு சம்பந்தப்பட்டது என்பதில் ஐயப்பாடில்லை. பொள் என்பது அவ்வினைச்சொல்லோடு சேர்ந்த ஒரு பெயர். இதற்குப் பொருள் உட்டுளை அல்லது ஓட்டையேயாம். பொளி என்பதும் அது. பொள்-ளிலிருந்து பொள்-ளல் பொள்-ளை எனுஞ் சொற்களும் கிளைத்து, உட்டுளை என்ற அர்த்தத்தையே அடிப்பொருளாகக் காட்டும். ஆதலால், பொல் அல்லது புல் எனும் சொல்லிற்கு உற்பத்தி பொள்ளுதலே எனக் கொள்ளலாம். பொள்ளுதலினின்று பொள் எனும் சொல் வந்து, உட்டுளையைக் குறித்தது. அப்பால் ஆகுபெயராய்

உட்டுளையுள்ள தாவரவர்க்கங்களைக் குறிக்குமிடத்து, ஈற்று ளகரம் தன்னோடு பிறப்பொத்ததாகிய லகரமாகத் திரிந்ததனால் பொல் என்று ஆயிற்று. மேலும் "பொல்" புல்லென்று ஆயிற்று. ஒகரமும் உகரமும் தம்முள் மாறிநடப்பது தமிழிலும் பிறபாஷை களிலும் பெருவழக்கு.

புல் எனுஞ்சொல் உட்டுளையுள்ள தாவரங்கள் எல்லாவற்றிற் கும் பொதுப்பெயர்; ஆகவே, பனை ஆதியவற்றிற்கு வெவ்வேறு சிறப்புப்பெயர்களும் வேண்டப்பட்டன. அவற்றுள் பனைக்குப் பொள் என்ற அடியினின்றே ஒரு பெயர் எழுந்தது. அது "போந்து" என்ற பெயர். பொள்ளுதலே போழ்தல் என்று ஆகி, போழ்ந்தது (உட்டுளையுள்ளது) போந்து என வந்தது. போந்து பனைப்பெயராவதை உதயணன்கதை இலாவாணகாண்டம் 12, 24—ல் காணலாம். பிங்கலந்தையும் போந்து பனை எனவும் போந்தை இளம்பனை எனவும் குறிக்கின்றது. போந்துச்சொல்லே போந்தை என மாறிற்று என்பது வெளிப்படை. பொய்கையார் பாடலிலும் "அவன் பொன்முடிமேற் போந்து கண்டாள்" என வரும். இம்மேற்கோளில் போந்து பனம்பூவை (சேரன்மாலையை) ஆகுபெயராய்க் குறித்தது. (பெருந்தொகை. 690). பதிற்றுப் பத்தில் (51) "போந்தைப்பொழில்" பனஞ்சோலை, "போந்தைத் தோடு" பனந்தோடு என வரும். புறநானூற்றில் (85) "முழாவரைப் போந்தை" "மடல்வன் போந்தை" (297) எனப் பனை குறிக்கப் படும். ஆயின், "இரும்பனம் போந்தைத்தோடும்" என்பது பொருந ராற்றுப்படை (143). இங்கு, போந்தை என்பது முதலின்பெயர் சினைக்குப் பொருந்திய ஆகுபெயராய் வந்தது; பனையின் பெயர் குருத்துக்கு ஆயிற்று. பூவுக்கும் ஆவதைத் தொல். பொருள். 60-இல் காண்க.

இனி, பனைப்பெயர் எழுந்த வரலாற்றை நோக்குவாம். முன்பு சுட்டிய பிங்கலநிகண்டுமேற்கோள் பின்வருவது:—

பனையின்பெயர்.

போந்து, தாலம், பெண்ணை, புற்பதி,
தாளி, கரும்புறம், புற்ருளியும் பனை.

இளம்பனையின் பெயர்.

போந்தை இளம்பனை.

கூந்தற்பனையின் பெயர்.

தாளி கூந்தற்பனை.

பனைக்குக் கூறப்படும் இச்சொற்களுள் தாலம் வடமொழி வழக்கு. அதுவும் தாளி எனுந் தமிழ்ச்சொல்லின் மரூஉவாம் எனக் கொள்ளல்வேண்டும்போலும். ஸம்ஸ்கிருத அகராதிகளில் தாலச் சொல் தட்(டுதல்) எனும் அடியினின்று பிறந்தது என்பர். பாளி அகராதிகாரர் இச்சொல்லைக் கிரேக்க talis telethao, (செழுமை யாயிருப்பது, தழைப்பது); லத்தீன் talea (தழை, கிளை) எனுஞ் சொற்களோடு ஒற்றுமைப்படுத்துவர். ஆயின், தொங்குகின்ற கூந்தல்களின் நிமித்தம் தமிழில் தாளிப்பனை என வந்த பெயரே, பின், வடமொழியில் தாலம் ஆயிற்றுஎன்பதுதான் தகுதி. மிக்க கூந்தலுடைய பனைவருக்கத்தைத் தித்திப்பனை தளப்பற்றுப்பனை களிற் காண்க. பனை வடநாட்டில் இல்லாது தென்னாட்டில்மட்டும் உள்ள மரமாகவே, வடமொழியாளர் தமிழ்ப்பெயரையே திரித்து அதற்கு வழங்கியிருப்பர் என்றலும் ஒன்று. தாளிச்சொல் வட மொழியினின்றும் வந்தது என்று சொல்லிவிடவும் இடமில்லை. அது தமிழில் தொங்குகின்ற, படர்கின்ற பல கொடிகளுக்குப் பெயராயிருத்தல் பிரசித்தம். கம்பந்தாளி, காட்டுத்தாளி, குறுகுற் ருளி, செந்தாளி, தேவதாளி முதலாக இப்பெயர் பல கொடி செடி களுக்கு வழங்குதல் காண்க.

தாலச்சொல் எவ்வாறாயினும், பிங்கலந்தை எடுத்தோதிய ஏனைச்சொல் எல்லாம் தமிழே என்பதில் மயக்கம் இல்லை. இவற் றுள் கரும்புறம் என்றது கருமையான புறப்பாகத்தை உடைய காரணத்தால் பனைக்குப் பெயர். உட்டுளையுடைமையால் புல் என வந்த பெயரே பிற உட்டுளைபொருந்திய தாவரங்களுக்கும் பெயரீடு

ஆனமையால், பனையைப் புற்களுள் விசேடம்பெற்றது எனக் காட்டிப் புற்பதி என்றார் நம்முன்னோர். இதனையே திருணராஜா என மொழிபெயர்த்தார் வடமொழியாளரும். இனி, புற்றாளி என்ற பெயரும் வெளிப்படை. இது புல்லும் தாளியும் எனும் இருபெயர் ஒட்டிவந்த ஒருபெயர். போந்து எனும் பெயர்வரலாற்றை முன் கண்டுகொண்டோம். அப்பால், பெண்ணையும் பனையுமே மிகுந்திருக்கின்றன. இவை இரண்டுபெயரும் ஒன்றே என்பது ஒருசிறிது ஆராயுங்கால் ஊகிக்கக்கிடக்கின்றது. பொள்ளுதலே புல்லுக்கு அடி என்றனமே. அப்பொள்ளுதல் போழ் எனவும், அப்பால் பேழ் எனவும் நின்று, பேழை எனுஞ் சொல்லுக்கு அடியாயிற்று. போழ்வாய் என்றும் பேழ்வாய் என்றும் இரு உருவமாய் வழக்கு இருத்தலும் காண்க. பேழுற்றது பேழை; அதுபோலவே பெள்ளுற்றது (பொள்ளுற்றது) பெட்டி என வந்தது. பெள்ளுதல் எனும் உருவம் தமிழில் இப்போது இல்லையாயினும், போழ் என்றது பேழ் என வந்ததுபோல, பொள்ளுதல் பெள்ளுதல் என்று ஆகியே பெட்டி எழுந்தது என நாம் ஒலிநூல்விதிகளுக்கு ஒப்ப முடிக்கலாம். பேழையும் பெட்டியும் துளைக்கப்பட்டவையாய் உள்ளே போழ்வுள்ளவையாய் இருத்தலால் அப்பெயரடைந்தன. தொள்ளுதலினின்று தோணி வந்தமையையும் நோக்குக. துளைத்தலே தொள்ளுதலாகி, தொள்ளுதலினின்று தொட்டலும், தோண்டுதலும் தொட்டியும் தோணியும் முறையே உருவங்கொண்டன. தோண்டி உள்ளிடம்வகுத்த மரம் தோணி. அவ்வாறே போழ்ந்திருப்பன (பேழ்ந்திருப்பன) பேடை (பெட்டி) என்றும் பெண்ணை என்றும் வரலாயினபோலும். "பெண்ணை" பண்ணை எனும் வழக்கொழிந்த உருவத்தினூடு பனை என மருவிநிற்றல் ஒலிநூல்விதிகட்குப் பொருத்தமுடையதேயாம்.

ஆதலால் புல், புற்பதி, புற்றாளி, போந்து, பெண்ணை, பனை ஆகிய இவ் ஐந்து சொல்லும் உட்டுளையுடைமையால் தாலவிருட்சத்திற்குப் பொருந்திய பெயர்களாம் எனக் காண்கின்றோம்.

பற்றிவெண் ணிணம்பெய் குடவயிற் றிநெடும்
 பதமடித் திருந்தடு களத்துட்
கற்றைவான் சடிலி புதல்வரைப் போலக்
 களித்திடுஞ் சிலகடிக் கணமே. (௮௩)

1698 கயிரவங் கமலங் கஞலிய தடஞ்சார்
 கவின்பொரு நையந்துறை வடபாற்
பயிரவி பதாதிக் குணவுகூர் களத்துட்
 படருஞா ளியைப்பிடித் தேறி
யயிரவக் குருதி யாற்றுள்வீ தியுலா
 யாடல்வன் சூலமொன் றேந்தி
வயிரவ னெனவே வேடமா றினவாய்
 மதத்துநின் றுடுவ சிலபேய். (௮௪)

1699 தொடித்தடந் தோளான் சுடர்ப்படை யொடுங்கண்
 டுயின்றுளா னிறந்துளா னல்ல
னிடித்தெழூந் திடிலெற் றுவனென நடுங்கி
 யிரியலுற் றனசில சிலபேய்
படித்தலத் திறந்து கிடந்ததுண் மையெனப்
 பற்றிய படையெனப் பறித்திட்
டடித்தலத் தினிற்கொற் றவைக்கடி யுறைவைத்
 தாடுவ பாடுவ சிலபேய். (௮௫)

1700 ஆளியுந் திறல்கெட் டழுங்குவான் கிடப்ப
 வவன்றன தருகுசென் றடர்பொற்
றேளின்மேற் கிடந்து பரிதிவா னவனிற்
 சுடருமங் கதங்கொளத் துணிந்தோர்
கூளிமற் றொருகூ ளியின்றலைத் தோண்மேற்
 கொண்டுமெட் டாதிழிந் ததனைக்
காளிகண் டதற்குக் கூளியென் றிடுபேர்
 காரணக் குறியெனக் கழறும். (௮௬)

1701 துங்கவே டுவனங் கதந்தனி லழுத்திச்
சுடர்விடுங் குருமணி யதனை
வெங்கன லெனவெண் ணிணத்தொடு தசையும்
வெதுப்பிவாய்க் கொள்வதற் கொருபேய்
யங்கத னயனீட் டவுமவை வெதும்பா
தலமரு துயவுறீஇ யெயிற்றூற்
றிங்கள்வெண் ணிலவு சொரிந்திட நகைத்துத்
திரண்டுநின் றுடுவ சிலபேய். (அஎ)

1702 வாட்படை யதனாற் றுணிந்தவண் கிடந்த
வயிரவெண் மருப்பினைக் குவவுத்
தோட்புடைக் கொண்டு கருவரைக் குவட்டிற்
றுறுபடைக் களத்திரு மருங்குஞ்
சேட்படக் கிடந்த தலைகளா தார
சிலைகளாய்ச் சேர்த்து [1]வாலமதிட்
டோட்டம துறுவ நடப்பன குருதி
யொழுக்கில்வீழ்ந் தேறுவ சிலபேய். (அஅ)

1703 மற்றவெண் மருப்பைத் தண்டிகைக் கிதுவே
வாய்ந்தகொம் பெனப்பெரும் புலித்தோ
லுற்றதொன் றினையேந் தெழிற்படா மெனக்கொண்
டுதிரமூழ் கியகுடர் கயிறாய்ச்
சுற்றுபு வயிரத் தோட்புடை கொண்டித்
துப்புர வளித்தனை யெனவண்
கொற்றவை தனைவைத் தமர்க்கள மறுகிற்
கொண்டுலா வருவன சிலபேய். (அகூ)

1704 உதிரவா றுதிகொண் டொழுகிய பிசித
வுணுமிசைந் துறுசுவை யினைக்கொண்
டெதிரெழா வெருவைப் பொருகளத் தடைந்தெவ்
வகைப்படு புலவையு மறித்து

[பி-ம்.] [1] பாலமதிட். ச.

மதிமரு டாவுண் டுறையுளாங் கதுவாய்
மனக்கொடு பண்டுதா மரீஇய
பதியெனும் பரவை தனைமறந் தமைந்த
பணைத்தபல் பகுதிமீன் கணமே. (கூ0)

1705 போரிடம் பயிலுங் களத்தினுட் சுறவு
பொருதிரைத் தெழக்கடற் புலத்து
நீரிடங் கொண்ட தெனக்கொழுங் குருதி
நிலாயதை யகிலபல் பூதம்
பேரிடந் தொறும்பேழ் வாய்மடுத் துதரம்
பெருக்கிவெள் ளிடைப்படுத் தியதாற்
பாரிட மென்முன் கொடுத்தபே ரதற்குப்
பலித்ததென் றுரைத்தனர் துறவோர். (கூக)

1706 மல்லனீர் ஞாலத் தியங்குமன் னுயிர்கண்
மனத்துறு போகமும் பொசிப்பு
நல்லியல் பதனாற் செய்யுமூ தியமு
நாளொடு கருமமுந் துணியா
தெல்லையி னிறந்து கொளத்துணிந் தெழிலாங்
கிறப்பதே திடனெனல் காட்டும்
பல்வகைப் படுமீன் குருதிவாய்க் கொளும்பா
ரிடத்தின்வாய்ப் பட்டிறந் ததுவே. (கூஉ)

1707 வெள்ளிடைக் கிடந்த வாளினை யெடுத்து
விழுங்குவ சிலகுறும் பூதங்
கொள்ளிவட் டமெனச் சுழன்றகண் ணெடுங்கோட்
புலியினை விழுங்குவ சிலபேய்
புள்ளிவண் டிமிருங் கவுட்கடா மலையைப்
போழ்ந்ததன் வயிற்றினுட் புகுந்தே
வள்ளுகி ருறக்கிள் ளியகுடர் தொடையாய்
மலைந்துநின் றுடுவ சிலபேய். (கூ௩.)

வேறு.

1708 மறந்தழைந்த வேடுவனு மதக்களிறுந்
துணைப்படையு மடிந்த தோடும்
புறந்தழைந்த மன்னுயிர்கள் செருக்களம்புக்
கிறந்தவையும் புணர்ந்த யாக்கை
துறந்ததனாற் சத்தாதி புத்திமனஞ்
சித்தமெனத் தொகுதி சாலு
மறந்தழைந்த புக்கிலவைக் கிறந்தனகொண்
டலகில்விமா னத்தி னோடும். (௯௪)

1709 உள்ளமுவந் தாளுடையோ ருள்ளுதொறு
முள்ளுதொறு முவட்டா மேன்மைத்
தெள்ளமிர்தந் தெவிட்டாத செழுந்தேற
லொருகணத்துஞ் சிந்தியாதே
கள்ளமுவந் திடுமனத்தர்க் கெட்டாது
கழிபெருங்கா வதனா மாடற்
புள்ளணியுங் கொடிப்பரமன் றாதுவரவ்
வழிவிரைவிற் பொருந்தி னாரே. (௯௫)

இரண்டுந் தொடர்.

1710 கற்கவா னுயர்பெரியோர் வடித்தகலை
யல்லாத கலைகள் கற்ற
தற்கவா தியரெனவே மருண்மனத்தி
னெதிர்மலைந்து தருக்கிக் கோப
நிற்கவா ருயிர்கொடுத்துப் பெருவிறல்கொண்
டமைவியந்த நினைவின் வீர
சொற்கவா தியருமரம் பையரும்விமா
னத்தினொடு தோன்றி னாரே. (௯௬)

1711 விழித்தெறியு மிருகடைக்கண் ணழலுமிழ
வகிலவுயிர் வெருவ வாழ்நாள்
கழித்தெறியு மடித்திடுகைப் பாசமுட
னாழியுறு காலின் வல்லே

சுழித்தெறியுங் கொழுங்குருதித் தண்டொடுநெட்
டிலைக்கவட்டுச் சூல மேந்திக்
கொழித்தெறிதெண் டிரைமுழக்கி னடுங்கால
தூதுவர்சேண் குறுகி னாரே. (௯௭)

1712 பொருந்தியபின் பனைத்துயிர்க்கு முயிராகிப்
புறத்துளவெப் பொருளு மாகும்
பெருந்தகைமை முழுமுதலா யடியவர்தம்
மெழுபிறவிப் பிணியை மாற்று
மருந்தெனவாழ் வுறுங்கருணைக் கடலாய
கரியமணி வண்ணன் றாதர்
விருந்தெனலா யிவணடைந்த தெவனெனவே
யிருவரையும் வினவ மாதோ. (௯௮)

1713 பெம்மானை யுலகளந்த முழுமுதலைக்
கருமணிபோற் பிறழு மேனி
யெம்மானைப் பணிந்தனராப் [1]புலங்களைவென்
றெழுபிறப்பா மீன வாழ்க்கைப்
பொய்ம்மாயத் தவம்பயில்வோ ருணர்வினைப்போல்
வீரரதம் பொருந்த லாலிக்
கைம்மாறு செய்திவற்றைச் சுவற்கமிசை
யிருத்துதலெங் கரும மென்றார். (௯௯)

இரண்டுந் தொடர்.

1714 முத்தலைநெட் டிலைக்கவட்டுச் சூலத்தன்
றாதுவர்போர் முனையின் மாய்ந்த
வித்திறத்த வரம்பிகந்த விழிதொழில்செய்
திறந்துபிறந் தெய்த்தே ஞானப்
பத்தியுமுத் தியுமுணர்ந்த வுணர்வினர்க்கு
மிடரிழைத்த பாவ கார
சத்தியவாய் மறநிலைநீத் தறநிலையுற்
றொருதவமுஞ் சார்ந்தி லாத. (௧00)

[பி-ம்.] [1] புலன்களைவென். சா.

1715 இருமையலா மிவற்றினுறு செவிப்புழையி
னாராச மிறக்கி நாட்டம்
வெருவரவை நுனையூசி யுண்ணிறுத்திக்
கொடுந்தழல்வாய் விழித்துப் பாசத்
துருவினையாப் புறத்தியபின் வாச்சியினு
லரிந்துபுழு வுழக்கு மாயப்
பொருவருதீங் கிழைநரகுக் கிரையாக்க
நமன்விடையிற் போந்தே மென்றார். (க0க)

1716 இழிதொழில்செய் தழிகுலத்திற் பிறந்தாலுந்
தீநரகுக் கிரையென் றாலும்
பழிபிறங்காப் புகழ்மலியித் திருநகரின்
புறத்திறந்தோர் பதுமை கோமான்
வழியடிமை முத்தரெனச் சினமறைந்தோ
ருரைபிறப்ப மறலி தூதர்
கழிபெரும்புத் தேளுலகத் தவரெனவுஞ்
சுபுகணத்துட் காந்திட் டாரே. (க0உ)

வேறு.

1717 போய காலையிற் றாலகா யத்தினைப் புறம்போய்த்
தூய காயமோ டுபய வாயுவு மிசை தோன்றா
மாய வன்றமர் கைக்கொளக் குவிறின மாரி
மேய வானர மடந்தையர் நடித்தனர் விழாவின். (க0ங)

1718 மடங்கல் போற்சமர் விளைத்தலா லறிஞர்கண் மலர்க்கு
மிடங்கொள் பேருணர் வினுக்குநன் செவிக்குநோ யிழைத்த
கடன்க ழிப்பவ ராகிய காமர்காட் சியர்முன்
றிடங்கொள் கின்னரர் பாடினர் தேவர்கா னமதே. (க0ச)

1719 தகுதி பெற்றவைந் தருநறு மலர்மழை தணவாப்
பகுதி கொண்டுநின் றுவப்புடன் பொழிதலும் பலகாற்
புகுதி வீரம திடமெம திடமெனப் புகன்றார்
மிகுதி வானவன் றமரிவ ரெனவும்விண் மிசையோர். (க0ரு)

1720 முண்ட கத்தய னுலகையுங் கடந்தபின் முற்றக்
கண்ட வாவர ணங்களே ழையுங்கடந் தனராய்

மண்டு தீம்புனல் விரைசையிற் படிந்தமா னவரு
மண்டர் நாயகன் மிசைதழீஇக் காங்கனுன் கடைந்தார். ()

1721 பத்த ருத்தமர் தமைப்பர மேட்டியுட் பான்முன்
வைத்த காலையிற் கமலநா யகன்றழீஇ மகிழ்ந்தே
முத்த ராம்வகை தன்னரு ளளித்திடு முறைதேர்ந்
தத்த ரோடமர் நித்தரு மற்புத மடைந்தார். (க0எ)

1722 ஊற்ற வைதுதி பூசியோர் விரனுதி யுறுத்தத்
தோற்ற மெய்வன நிலைமையுஞ் சுடரினுஞ் சுடுங்காற்
சீற்ற மேயதீ நடுவண நிற்பதுஞ் செனன
மாற்ற விந்நகர் வைகும்வாழ் வினுக்குநே ரலவே. (க0அ)

1723 மகர வாருதி வளைத்தபார் வலம்வரு வனவுஞ்
சிகர மால்வரை முழைகள்போய் வைகுமச் செயலும்
பகரு முத்தம நதிகளா டலினுறு பயனு
நிகரி விந்நகர் வைகும்வாழ் வினுக்குநே ரலவே. (க0கூ)

1724 உவந்து டம்பினை வெறுத்துண வொறுத்துயி ரதனைப்
பவந்தொ டர்ந்திட ரிழைப்பதைத் துடைத்திடப் பழிதீர்
தவந்தொ டங்குவ துவந்தவர் தாமுநற் றவத்து
ணவந்து டங்குவ திவணுறை குவதென நவின்றார். (கக0)

இவை மூன்றுந் தொடர்.

1725 ஆய காலையி லறனமை வரவரும் பாவந்
தேய நித்தம துணர்ந்துபே ரின்பமேற் றியான
மேய வோகையி னிருபசை யறுத்தமெய்ஞ் ஞானத்
தூய வுத்தம வசிட்டனு மாயிடைத் தோன்றும். (ககக)

1726 நவந்த வாமறை வேதியர் மதுகர நசையாற்
றுவன்ற தூமலர் தூவியே முனிவனைத் தொழுது
தவந்த வாநிறைச் சதுமுகன் மதலைநீ தமியே
யெவன்கொ லோவிவ ணடைந்தமா ணெமக்குரை யென்றார். ()

1727 அண்ட மாதிய வனைத்தையும் பெரும்புன லழிநாட்
புண்ட ரீகனை யழிவிலாப் பொருள்பொறை யுயிர்த்தே
பண்டு போலவை படையெனப் படர்ந்தபின் படைத்தோன்
றொண்டர் வாழ்வுறத் தோன்றுதி யெனத்துதித் தனனால்.

1728 விட்பு லத்தின்மே லழிவிலாப் [1]பதத்துவாழ் விமலன்
புட்பு யத்தடைந் தெதிர்ந்துநின் பொருட்டினாற் புவியோர்
கட்பு லங்கொளத் தோன்றுவன் குருகையுட் கடல்சூழ்
மட்பு லத்தவண் வருகவென் றறைந்தனன் மாயோன். ()

1729 தந்தை யார்தமக் கருச்சனைத் தலமுரைத் ததையெம்
மெந்தை யாரெமக் குரைத்துடன் வருகவென் றிசைத்தார்
[2]முந்தை நான்மறை முழுதுணர் கேள்வியே முயல்வீர்
சிந்தை காமுற வடைந்தனன் றிவமிஃ தெனவே. (கக௫)

1730 பூவி னான்முகன் வழிபடும் படிக்கருள் புரிந்த
தேவி னெல்லையா மிவணெனச் சதுமறை தெழிக்கு
நாவி னானுரைத் தருளிய ஞானதே சிகர்தம்
மாவி யேயிவை கேட்டியென் றறைந்தன ரறவோர். (கக௬)

1731 விதியி னுக்கருள் புரிந்திறை யருச்சனை விரும்பிப்
பதித னக்குயர் வடகிழக் கெனவொரு பதியெம்
மதித னக்குணர் வரியதா யினவென மாயோன்
கதித னக்குமுன் னியதலங் கண்டதுங் கழறு. (கக௭)

1732 சங்க மாநக ரினைவலம் பயின்றெழு தவமு
மங்கண் வானக டுரிஞ்சிய வெற்பிரண் டவைபோல்
வெங்கண் வேடனோ டிபமலைந் தவனுயிர் விடவே
பங்க யாசனத் தொருவனுங் காண்கலாப் பதத்தே. (கக௮)

1733 இரவி னெல்லையுட் கொழுந்துழாய் மார்பனே வலினோர்
வரவி யைந்துவிட் புலங்கொடு போயதும் வசிட்டக்
குரவ கண்டன மிவற்றினுட் குறிக்கொளா விரண்டும்
விரைவி னார்வமுற் றுரையென வசிட்டனும் விளம்பும். ()

இவை மூன்றுந் தொடர்.

பதினாறவது:

வேடனும் வேழமும் வதைப்படுசருக்கம் முற்றும்.

[பி-ம்.] [1] பதத்துள்வாழ். ச. [2] முந்த. ச.

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

1936-ஆம்வருஷ ஜூன்மாத வரவு செலவு கணக்கு.

விவரம்	வரவு 1936 ஜூன்	வரவு 1935 ஜூன்	விவரம்	செலவு 1936 ஜூன்	செலவு 1935 ஜூன்
			I General Section :		
I General Section :			(1) சங்கம்மானேஜ்மெண்டாபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ...	75 8 ...	
			(2) சங்கக்கலாசாலை உபாத்தியாயர்கட்குச் சம்பளம் செல்லாக்கியது ...	35	
1) மாதச்சந்தாவகையில் வரவு...	60		(3) சங்கக்கலாசாலை மாணவர்களுக்குப் போஷணைக்காகச் செல்லாக்கியது. ...	119 8 3	
			(4) Stationery, contingencies வகையிற் செலவு ...	6 4 ...	
(2) சங்கக் காலிவிடத்துக்கு மாத வாடகை வரவு ...	30		(5) சங்கக்கட்டிட மராமத்து வகையிற் செலவு ...	5 9 ...	
			(6) தபால், தந்தி வகையிற்செலவு	3	

(3) Miscellaneous வரவு ...	10	5	...			
மொத்தம் ரூ ...	100	5	...	80	...	...

(7) சங்கமாபீக சில்லறைவேலைகள் சம்பந்தமாக அச்சுக்கூலி பைண்டிங்கூலிவகையிற் செலவு...	14	8	...			
(8) சங்கப்பரீக்ஷைசம்பந்தமாகச் செலவு ...	4	6	6			
மொத்தம் ரூ	263	11	9	261	12	9

II Editorial Section :

(1) சங்கப்பதிப்புப்புத்தகங்கள் விற்றவகையில் வரவு ...	139	9	9			
(2) செந்தமிழ்ப் பழையபிரதி விற்றவகையில் வரவு ...	...	8	...			
மொத்தம் ரூ ...	140	1	9	143	4	3

II Editorial Section:

(1) ஷை ஆபீஸ் ஸிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ...	82	11	10			
(2) சங்கப்பதிப்புப்புத்தகங்கள் அச்சிடும்சம்பந்தமாக ஸ்டேஷனெரி கண்டின்ஜன்ஸிவகையிற் செலவு. ...	3	3	...			
(3) ஷை சம்பந்தமாக அச்சுக்கூலி, பைண்டிங்கூலிவகையிற் செலவு.	63	...	...			
(4) தபால் தந்திவகையிற் செலவு	7	...	...			
மொத்தம் ரூ ...	155	14	10	229	4	8

III Press Section :

(1) அச்சுக்கூலிவகையில் வரவு	74	8	...			
(2) பைண்டிங்கூலி வகையில் வரவு ...	3	...	...			
(5) Miscellaneous வரவு ...	2	14	...			
மொத்தம் ரூ ...	80	6	...	118	8	...

III Press Section :

(1) அச்சாபீஸ்ஸிப்பந்திகளுக்குச் சம்பளம் செல்லாக்கியது ...	45	8	...			
(2) ஷை ஆபீஸ் Stationery Contingencies வகையிற் செலவு.	7	7	...			
மொத்தம் ரூ ...	52	15	...	64	4	[illegible]

விவரம்	1936			1935			விவரம்	1936			1935		
ஆகமொத்தம் வரவு ரூ. ...	320	12	9	336	12	3	ஆக மொத்தம் செலவு ரூ.	472	9	7	555	[illegible]	...
வருஷ ஆரம்பத்திலிருந்த கையிருப்பு ரூ. ...	601	2	8	1973	9	11	மாதமுடிவில் மீதியிருப்பு ரூ. ...	*449	5	10	1755	...	2
ஆகமொத்தம் ரூ. ...	921	15	5	2310	6	2	ஆக மொத்தம் ரூ. ...	921	15	5	2310	6	2

*By M. R. C. C. Bank
Pass Bk. in current
account Rs. 350- 0- 0
Cash on hand Rs. 99- 5-10

449- 5-10

குறிப்பு:—மேலேகண்ட விவரப்படி இம்மாதமுடிவில் மீதி இருப்பு ரூ. 449—5—10 தவிர, மதுரை M. R. C. C. Bankல் [illegible] Fixed Depositல் [illegible] (1) ரூ. 25011—5—0, (2) ரூ. 1050—0—0; [illegible] Fixed Depositல் [illegible] (1) ரூ. 10000, (2) ரூ. 10000, (3) ரூ. 5000, [illegible] ரூ. 1200 ஆகும்.

Audited and found correct,
V. S. RAMASWAMI, AUDITOR, 17—7—'36.

LAKSHMINARAYANAN,
MANAGER, 2—7—'36.

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

1936-ஆம் வருஷ ஜூலைமாத வரவு செலவு கணக்கு.

விவரம்.	வரவு 1936 ஜூலை			வரவு 1935 ஜூலை			விவரம்	செலவு 1936 ஜூலை			செலவு 1935 ஜூலை		
I GENERAL SECTION:							I GENERAL SECTION:						
(1) சங்கம் ஆங்கிலத்தமிழ்ப் பரீக்ஷையில் முதல் வகுப்பில் தேர்ச்சிபெறும் மாணவர் ஒருவருக்கு ஸ்ரீமான், டி. வி. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் பேரால் தங்கப்பதக்கமொன்று அளித்துவருவதற்காக மூலதனம் வரவு ...	1001	...	...				(1) சங்கம் மானேஜ்மெண்டார் பீஸ் சிப்பந்திகளுக்குச் சம்பளம் செல்லாக்கியது ...	175	8	...			
							(2) சங்கக்கலாசாலை உபாத்தியாயர்களுக்குச் சம்பளம் செல்லாக்கியது ...	245	...	...			
(2) மாதச்சந்தாவகையில் வரவு ...	189	8	...				(3) சங்கக்கலாசாலை மாணவர்களுக்குப் போஜனைக்காகச் செல்லாக்கியது. ...	133	...	10			
(3) பாங்கியில் போடப்பட்டுள்ள தொகைக்கு வட்டி வகையில் வரவு ...	437	8	...				(4) Stationery contingencies வகையிற்செலவு ...	9	9	3			
(4) சங்கக்காலிவிடத்துக்கு மாத வாடகை வரவு ...	30	...	...				(5) பாண்டியன்புத்தகசாலைக்கு வரும் பத்திரிகைக்குச் சந்தா செல்லாக்கியது. ...	7	5	...			

(5) **Miscellaneous** வரவு ...	...	4	...			
மொத்தம் ரூ ...	1658	4	...	206	12	9

(6) தபால், தந்திவகையிற்செலவு	1	...	...			
(7) சங்கமாபீசு சில்லறைவேலைகள் சம்பந்தமாக அச்சுக்கூலி பைண்டிங்கூலிவகையிற் செலவு.	7	8	...			
மொத்தம் ரூ ...	578	15	1	415	6	5

[illegible] EDITORIAL SECTION:

(1) சங்கத்தின் அங்கத்தினர்களிடமிருந்து சந்தாவகையில் வரவு.	6	...	...			
(2) செந்தமிழ்ப் பத்திரிகையின் சந்தாதாரர்களிடமிருந்து சந்தா வரவு ...	4	...	...			
(3) சங்கப்பதிப்புப்புத்தகங்கள் விற்றவகையில் வரவு ...	149	3	9			
(4) செந்தமிழ்ப் பழையபிரதிகள் விற்றவகையில் வரவு. ...	5	1	9			
மொத்தம் ரூ ...	164	5	6	148	10	...

II EDITORIAL SECTION:

(1) ஷை ஆபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ...	85	...	...			
(2) சங்கப்பதிப்புப்புத்தகங்கள் அச்சிடும் சம்பந்தமாக ஸ்டேஷனெரி கன்டின்ஜன்ஸி வகையிற் செலவு ...	35	15	3			
(3) ஷை சம்பந்தமாக அச்சுக்கூலி பைண்டிங்கூலி வகையிற் செலவு ...	91	10	...			
(4) தபால், தந்திவகையிற் செலவு. ...	12	...	...			
மொத்தம் ரூ ...	224	9	8	357	10	4

III PRESS SECTION:

(1) அச்சுக்கூலிவகையில் வரவு.	85	8	...			
(2) பைண்டிங் கூலிவகையில் வரவு ...	3	...	...			
(3) சங்கம் அச்சாபீஸிலிருந்த பழைய டிரெடில் மெஷின் விற்ற வகையில் வரவு ...	300	...	...			
மொத்தம் ரூ ...	388	8	...	87	8	...

III PRESS SECTION:

(1) அச்சாபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ...	45	9	...			
(2) ஷை ஆபீஸ் **Stationery contingencies** வகையிற் செலவு.	5	6	9			
மொத்தம் ரூ. ...	50	15	9	55	6	8

ஆகமொத்தம் வரவு ரூ ...	2211 1 6	442 14 9	ஆக மொத்தம் செலவு ரூ ...	854 8 1	828 7
மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்பு ரூ ...	419 5 10	1755 ... 2	மாத முடிவில் மீதி இருப்பு ரூ ...	*1805 15 3	1369 7 6
ஆகமொத்தம் ரூ ...	2660 7 4	2197 14 11	ஆகமொத்தம் ரூ ...	2660 7 4	2197 14 11

*By M. R. C. C. Bank
Pass Book in current
account Rs. 1651- 0- 0
Cash on hand Rs. 154-15- 3

1805-15- 8

[illegible] மீதி இருப்பு ரூ. 1805-15-3 தவிர, மதுரை M. R. C. C. Bank-ல் கட்டியுள்ள Fixed Deposit-க் கணக்குகளின் தொகைகள் (1) ரூ. 25011-5-0; (2) ரூ. 1050-0-0; [illegible] கட்டியுள்ள Fixed Deposit-க் கணக்குகளின் தொகைகள் (1) ரூ. 10000; (2) ரூ. 10000; (3) ரூ. 5000; [illegible] ரூ. 1,200 ஆகும்.

Audited and found correct,
V. S. RAMA[illegible] AUDITOR, 22—8—'36.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

II. செந்தமிழ்ப்பிரசுரம்.

1.	ஐந்திணையைம்பது உரையுடன்	0	4	0
2.	கனநூல் (5) இனியதுநாற்பது (உரையுடன்) ...	0	3	0
3.	*வளையாபதிச்செய்யுட்கள்			
4.	புலவராற்றுப்படை	0	3	0
6.	நேமிநாதம் (உரையுடன்)	0	12	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	0	6	0
8.	திணைமாலைநூற்றைம்பது (உரையுடன்) ..	0	8	0
9.	அநுமானவிளக்கம்	0	10	0
10.	அட்டாங்கயோகக்குறள்	0	2	0
11.	*விவசாயரசாயன சாஸ்திரச்சுருக்கம்			
12.	*பன்னிருபாட்டியல்			
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	0	4	0
14.	மூத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	0	3	0
15.	திருச்செந்திற்கலம்பகம்	0	3	0
16.	திருவாரூருலா	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்...	0	4	0
19.	தேவையுலா	0	3	0
20.	நரிவிருத்தம்	0	2	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	0	8	0
22.	*திருக்கலம்பகம் (ஷை)			
23.	*விக்கிரமசோழனுலா			
24.	குருமொழிவினாவிடை	0	1	0
25.	கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை... ...	0	2	0
26.	திருத்தணிகைத்திருவிருத்தம்	0	1	0
27.	மதுரைத்திருப்பணிமாலை	0	8	0
28.	*சந்திராலோகம்			
29.	*சோழவம்சசரித்திரச்சுருக்கம்	0	3	0
30.	ஞானமிர்தக்கட்டளை	0	4	0
31.	பாண்டியம்	0	8	0
32.	மனீஷாபஞ்சகம்	0	8	0
33.	வேளிர்வரலாறு	1	4	0
34.	அகப்பொருள்விளக்கம்			
35.	*திருமந்திரநூற்பாட்டுக்குறை	0	1	0
36.	உவமானசங்கிரகம்	4	8	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	0	2	0
38.	திருப்புல்லாணிமாலை	1	0	0
39.	*பழமொழி மூலமும் பழையவுரையும் (முதல் 100 செய்)	0	8	0
40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ...			

41.	பொருட்டொகைநிகண்டு	0	6	0
42.	அகராதிநிகண்டு	0	12	0
43.	மேகவிடுதூது	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	0	2	0
45.	தண்டலையார்சதகம்	0	4	0
46.	இராமோதந்தம்	0	3	0
47.	பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100செய்)	1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	0	6	0
49.	*கடைவள்ளலார்காலம்	0	6	0
50.	தமிழரும் ஆந்திரரும்	0	4	0
51.	மதங்கசூளாமணி	1	0	0
52.	கூடற்புராணம்	0	10	0
53.	திருவள்ளுவர்	0	6	0
	ஷை ஆங்கிலத்தில்	0	6	0
54.	அரும்பொருள்விளக்க நிகண்டு ...	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ...	0	12	0
56.	பாப்பாவினம்	0	10	0
57.	மதுரைமும்மணிக்கோவை	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	0	3	0
59.	கடம்பர்கோயில் உலா	0	6	0
60.	சங்கரநயினார்கோயில் அந்தாதி	0	6	0
61.	கலைசைக்கோவை	0	12	0
62.	பெருந்தொகை	5	0	0
63.	சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை ...	0	5	0

* இவ்வடையாளமிடப்பட்டவை இப்போது கைவசமில்லை.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டுவெளியாகிவரும் இச்“ செந்தமிழ் ”ப்பத்திரிகைக்கு வருஷச் சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச் சந்தா ரூ 4—8—0. இதுவரை 33 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாததொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—12—0 வீதமும் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரசுரம், செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் முழுத்தொகுதி— இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100க்கு 10 வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

3. சங்கப்பதிப்புப்புத்தகங்களை, ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு, ரூபா ஒன்றுக்கு அரை அணா வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

லக்ஷ்மீநாராயணையர், மானேஜர்.